Registered No. M. 878.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மக்ஞாநக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கில௴
15௳யில் பிரசுரமாகி நடைபெறும்

**மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.**

தொகுதி 4. } 1913௵ நவம்பர்௴ 15௳ / பிரமாதீச௵ ஐப்பசி௴ 30௳ { பகுதி 7.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கசாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

242

# பொருளடக்கம்.

## (CONTENTS.)


1. தற்காலநிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர் 225
From the Editor—A. Rangaswami Iyer

2. கல்விகற்பித்தல் ஈசுவர கைங்கர்ய மெனக் கருதல் — ப. நாராயண ஐயர் 230
Education as Service—P. Narayana Iyer.

3. துகாராம் பாவாவின் சரித்திரம்—ஏ. சிவராவ். 235
Life of TukaramBaba—A. Siva Rao.

4. ஸ்ரீ தேவாபி சோடச கலாமாலை — ஸ்வாமி. M. வேதநாயகம் F.T.S, 243
Devapi Shodasakalamala–Swami M. Vedanayagam F.T.S.

5. அஹல்யா சாபவிமோசநம்—R. ஸ்ரீநிவாஸ ஐயர் M. A. 247
Curse of Ahalya discharged—R. Srinivasa Iyer M. A.

6. ஸுமதி யென்னும் உத்தமியின் சரித்திரம் — எஸ். ஸ்வாமிநாதஐயர் 249
Sumathi a Novel—S. Swaminatha Iyer.

7. மநம்—மு. வேங்கடஸாமி நாட்டார் 257
Mind—M. Venkatasamy Nattar.

8. சமாசாரம்—பத்திராதிபர். 261
News—Editor.


---


### பக்தமாலா வசனம்.

12-வது சஞ்சிகை (கடைசி சஞ்சிகை) நடந்து கொண்டிருக்கிறது:—

இது மகாராஷ்டிர பாஷையிலும் தமிழிலும் வல்லவரான ஸ்ரீமான். வே. பால கிருஷ்ணமுதலியாரால் வடதேசத்தில் மஹீ பதிபாவா என்னும் மகானொருவர் மகாராஷ்டிர பாஷையில் செய்துள்ள பக்த விஜயம், சந்த விஜயம், சந்த லீலாமிருதம், பக்த லீலாமிருதம் என்ற பக்த சரித்திரங்களடங்கிய கிரந்தங்களை நம் தமிழ் நாட்டுக்குப் பயன்படும் வண்ணம் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டது. இதில் கபீர் தாசர், ராம தாசர், ஜய தேவர், துளசி தாசர் முதலாகிய பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கி யிருக்கின்றன. இது டெம்மி சுமார் 100-பாரங்களுக்கு (800-பக்கம்) மேலே கொண்டதோர் பெரிய கிரந்தமாகும். இனிமேல் ஆர்டர் செய்கிறவர்களுக்கு 12 சஞ்சிகைகளையும் சேர்த்து பயிண்டு செய்து ஒரே புத்தகமாய் அனுப்பப்படும். விலை ரூ 3–8–0. தபால் சார்ஜ் வேறு.

குறிப்பு:— மேற்கண்ட புத்தகத்துக்கு 1913 டிசம்பர் மாதம் 15 தேதிக்குள் ஆர்டர் செய்கிறவர்களுக்கு வி. பி. தபால் சார்ஜ் இல்லாமல் ரூ–3–8–0. க்கே அனுப்பப்படும்.

Apply to:— மானேஜர் 'பக்தமாலா' ஆபீஸ்
107. பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 4. | 1913ளு நவம்பர்மீ 15உ
பிரமாதீசஞு ஐப்பசிமீ 30உ | பகுதி 7.

## தற்கால நிலைமை.

நாளிது அக்டோபர்மீ 18, 19உ களில் இந்நகரத்தில் பாண்டியநாட்டு பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாஸபை கூடியது. அதாவது, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி இந்த ஜில்லாக்களிலுள்ள கிளைச் சங்கங்களிலிருந்தும், சிதம்பரம், கும்பகோணம், அடையாறு, பாலக்காடு முதலான விடங்களிலிருந்தும், மெம்பர்கள் மேற்சொல்லிய மஹா ஸபைக்கு வந்தனர். அந்த இரண்டு தேதிகளிலும் மஹாஸபையானது மிக விமர்சையாக நடைபெற்றது.

* * *

மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரவர்கள் அம் மஹாஸபையின் அக்கிராசநத்தை வஹிக்க ஒப்புக்கொண்டனர். ஆனால் அவர்கள் சென்றமீ 17உ சாயங்காலம் சென்னை விக்டோரியா டவுன் ஹாலில் ஒரு பிரஸங்கம் செய்வதாக முன்னமேயே ஒப்புக்கொண்டு விட்டபடியால் 18உ சாயங்காலம் தான் மதுரை வந்து சேரும்படியாய் நேர்ந்தது. அவர்களுடன் கூட அடையாற்றிலிருந்து ஸ்ரீமான் பி.பி. வாடியா (B.P. Wadia) என்ற பார்ஸி நண்பரும், ஸ்காட்லண்டு தேசத்து பிரஹ்மஞான சபைப் பிரிவின் (Section) ஜெனரல் ஸெக்ரிட்டரியாகிய ஸ்ரீமான் கிராஹம்போல் (Mr. Graham Pole) என்பவரும் வந்தனர்.

18உ காலையில் மதுரை காலேஜ் ஹாலில் ஸபை ஆரம்பித்தது. அச்சமயம் மகா-ா-ா-ஸ்ரீ ப. நாராயண ஐயரவர்கள் தேஹ அசௌகரியத்தால் வரத் தடைபட்டதினிமித்தம் மகா-ா-ா-ஸ்ரீ அ. ரங்கஸ்வாமி ஐயரவர்கள் பிரதம உபந்யாஸம் செய்தார். பிறகு வந்திருந்த நண்பர்களை உபசரித்து மகா-ா-ா-ஸ்ரீ பென்ஷன் ஸப்ஜட்ஜ். T. ராமசந்திர ராயரவர்களை அன்று காலை அக்ராஸநம் வகிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

*
* *

அப் பிரதம உபந்யாஸத்தில், ஆங்கிலேய தேசத்தில் பர்மிங்ஹாம் நகரில் கூடின வருஷாந்த சாஸ்திர விசார ஸபையில் (Scientific Association) ஸர் ஆலிவர் லாட்ஜ் (Sir Oliver Lodge) என்னும் பெயரையுடைய பூதசாஸ்திர (Physics) வல்லுனர், நம்முடைய ஐம்புலன்களாலும் அறியக்கூடாத உலகங்களும் சக்திகளும் உள்ளனவென்று வற்புறுத்தினரென்றும், உலகத்தில் தற்காலத்தில் மதம், ஆசாரம், நாகரிகம், வித்யை, ஜாதிபேதம் முதலிய பற்பல பொது விஷயங்களின் கொள்கைகளில் மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றனவென்றும், அம்மாறுதல்கள் விபரீதமான கார்யங்களைப் பயக்காவண்ணம் அவைகளின் தத்துவார்த்தங்களை நாம் அறியவேண்டுமென்றும், அம்மாறுதல்கள் நாஸ்திக வழிகளை நோக்காமல், ஜீவர்கள் மேன்மேலும் அபிவிருத்தியை அடையும்பொருட்டு ஈசுவரனுல் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மார்க்க (Path of Human Evolution) த்தில் செல்லவேண்டுமென்றும், அம்மாறுதல்களின் கதி அதிவிரைவாயிருப்பதால் அவ்விரைவான நடையைத் தடுக்கத் தடைகளும் ஏற்படுமென்றும், அக்காலங்களில் நம்முடைய பக்தி, சிரத்தை, விடாமுயற்சி இவை தளரக்கூடாவென்றும், தற்காலமானது உலகத்திற் கெல்லாம் பரமாசாரியர், அதாவது ஜகத்குருவாய் விளங்குகின்ற மஹரிஷி அவதரிக்கத்தக்க காலமென்றும், இப்பேர்ப்பட்ட நல்ல விஷயத்தை உலகத்தின் கண் பஹிரங்கமாக வெளிப்படுத்தும்படி தம் குருவால் ஆக்ஞாபிக்கப்பட்டு, அவ்விதம் எல்லாத்தேசங்களிலும் பஹிரங்கமாயும் அபரிமிதமான உத்ஸாகத்துடனும் தைர்யத்துடனும் பலவிதங்களில் வெளிப்படுத்தி வருகிற மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட். அம்மையாரவர்களுக்கு நாம் நம்முடைய நன்றியறிவையும் விசுவாஸத்தையும் காட்ட வேண்டுமென்றும் சொன்னுர்.

மகா-ா-ா-ஸ்ரீ T. ராமசந்திரராயரவர்கள் அக்ராஸநம் வகித்து, தற்கால நிலைமையில் பிரஹ்மக்ஞான ஸபையின் முக்கிய மான கடமை, நாநாவிதங்களிலும் பொது நன்மைக்கு வேலை செய் வதையே பிரதானமாகக் கைகொள்ளுவது தானென்று வற்புறுத் திக் கூறினர்.

***

இம் மதுரை நகரில் பெரிதான கீர்த்தியடைந்து, பிறகு சென்னப்பட்டணத்திற்குச் சென்று, அங்கு பல லௌகிக ஸ்தானங் களை வகித்து, ஹைக்கோர்ட்டில் ஆக்டிங் பிரதான ஜட்ஜாக விருந்து பென்ஷன் பெற்று, இப்போது வயதிலும், அநுபவத்திலும், வை திக லௌகிக பொது விஷயங்களிற் சிரத்தையிலும், பெரியவரா யிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ ஸர். எஸ். ஸுப்ரஹ்மண்ய ஐயரவர்கள் "பிரணவ வாதம்" என்ற ஒரு அற்புத கிரந்தத்தைக் குறித்து, ஒரு வியாஸமெழுதி அன்புடனனுப்பி யிருந்தனர். அந்த வியா ஸத்தை மதுரை ஹைக்கோர்ட்டு வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ வி. ராம சந்திர ஐயரவர்கள் வாசித்தனர்.

***

பெரியகுளம் மகா-ா-ா-ஸ்ரீ ஆர். சுந்தரராஜ ஐயரவர்கள் பிரஹ் மக்ஞான ஸபையைப் பற்றித் தமிழில் தெளிவாகப் பிரஸங்கஞ் செய்தனர்.

***

அன்றுதினம் சாயங்காலம் 5–20 மணிக்கு மாதுஸ்ரீ அன்னி பெஸண்ட் அம்மையாரவர்கள் மேற்சொல்லிய மற்ற நண்பர்களு டன் மதுரை வந்து சேர்ந்தனர். மதுரை ரயில்வே ஸ்டேஷனில் அநேக கனவான்கள் அவர்களுக்கு நல்வரவு கூறி, உபசரித்து, மரியாதைகள் செய்து யானை, விருதுகள், மேளவாத்தியம் முதலிய வைகளுடன் அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த பங்களாவுக்கு அழைத்துச் சென்றனர்.

***

அன்றுதினம் சாயங்காலம் 6–30 மணிக்கு மதுரைக் கா லேஜ் ஹாலில் மாதுஸ்ரீ அம்மையாரவர்களின் பிரஸங்கம் கேட்கும் பொருட்டு வெகு ஜனங்கள் திரளாய்க் கூடியிருந்தமையால், இடம் போதாத காரணத்தால், எல்லோரும் உட்கார்ந்து கேட்கக் கூடா

மல், அநேகர் நின்றுகொண்டே கேட்கும் படிக்கும் நேர்ந்தது. அப்பொழுது அம்மையார் இந்தியாவுக்கு பிரஹ்மக்ஞான ஸபையால் உண்டான நன்மைகளைப் பற்றி கம்பீரமாயும் விஸ்தாரமாயும் உபந்ய ஸித்தார்.

*
* *

மறுநாள் பகல் 1-30 மணிக்கு அவர்கள், மதுரை, திரு நெல்வேலி, இராமநாதபுரம் இந்த ஜில்லாக்களின் ராஜாங்க சம்பந்த மான சீர்திருத்தங்களைப் பற்றிக் கூடியிருந்த "Electoral Group Conference" என்ற மஹாஸபையின் காரியதரிசிகளின் வேண்டு கோளுக்கிணங்கி, நம்முடைய சென்னை சர்வகலாசாலை (Madras University) யில் தமிழ் முதலிய நந்தாய்பாஷைகளின் அபிவிருத் திக்குப் பாதகமாகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளின் குறைக ளைப் பற்றிப் பிரஸங்கம் செய்தனர்.

*
* *

பிறகு அன்று பகல் 3 மணிக்கு மகா-ா-ா-ஸ்ரீ ப. நாராயண ஐயர் அவர்கள் தேஹ அசௌகரியத்தால் மாதுஸ்ரீ பெஸண்ட் அம் மையவர்களை ஸபைக்குப்போய்ப் பார்க்கக்கூடாமையால், அம்மை யாரவர்களே மகா-ா-ா-ஸ்ரீ ஐயரவர்களின் கிருஹத்திற்கு விஜயம் செய்து ஐயரவர்களுக்கு க்ஷேமம் உண்டாகும்படி ஆசீர்வதித்தனர்.

*
* *

அன்று சாயங்காலம் 5-15 மணிக்கு Group Conference ஸபை கூடியிருந்த கட்டிடத்தில் மதுரை நகரின் பிரதான வாஸிகள், இந்தி யாவின் நன்மைக்காகப் பற்பல துறைகளில் சென்ற 20 வருஷகாலமாக மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரவர்கள் இடைவிடாது செய்து வந்திருக்கிற வுதவிகளைக் கொண்டாடி ஒரு பத்திரிகையை (Address) அச்சமயத்திற்கேற்ப நன்று யமைக்கப்பட்டுள்ள சித்திர வேலைப்பாடமைந்த ஒரு வெள்ளிப் பெட்டியில் வைத்து, அவர்கட் களித்தார்கள்.

*
* *

அதற்குப் பிறகு அவர்கள் "ஐக்கிய இந்தியா" (United India) என்ற விஷயத்தைப் பற்றி ஆயிரக்கணக்காய் மிகஆவலுடன் கேட்க வந்த ஜநஸமூஹத்திற்கு உபந்யாஸம் செய்தார்கள்.

அன்று சாயங்காலம் 6-30 மணிக்கு நன்றாக அலங்கரிக்கப்பெற்ற மதுரை ஸேதுபதி ஹைஸ்கூல் கட்டிடத்தில், மதுரை பிரஹ்மஞான ஸபைக்குச் சேர்ந்த ஸ்ரீமீநாக்ஷி வித்யாசாலை என்ற பெண் கல்விச் சாலையின் மாணாக்கர்களுக்கு அவர்கள் அக்ராஸநத்தில் வீற்றிருந்து பரிசுகள் அளித்தார்கள்.

*
* *

மறுநாள் காலை 8-30 மணிக்கு அவர்கள் மதுரையிலிருக்கும் மாணாக்கர்களுக்கு "வருங்காலத்தில் அவர்களுக்குரிய கடமைகளை"ப் பற்றிப்பிரஸங்கித்தார்கள். அவ்வுபந்யாஸத்தில், இளமைப்பருவத்திலே மாணாக்கர்கள் தம் இஷ்டப்படி, மநம் போன போக்கெல்லாம் போகாமல், சரீரம் (Body), ஆசை(Desire), மநஸ்(Thoughts) இம் மூன்றையும் ஸந்மார்க்க முறையாக நேர்மைப் படுத்தினால் மட்டும், அவர்கள் கிருஹஸ்தர்களாகி பொது நன்மையான விஷயங்களுக்கு உபயோகமுள்ளவர்களாவர் என்றும், இங்கிலாந்தின் பொதுப் பாடசாலைகளில் (Public Schools) படிக்கும் மாணாக்கர்கள் இந்திய மாணாக்கர்களைக் காட்டிலும் ஸ்வேச்சை குன்றியவர்களென்றும், அவர்கள் தம் மநம் சென்றபடி, தகாத மார்க்கங்களிற் செல்லாவண்ணம் அப்பாடசாலைகளின் மேலதிகாரிகள் அநேக விதிகளையேற்படுத்தியிருக்கின்றனரென்றும், அவ்விதிகளை யநுஷ்டித்து அவ்வாலிபர்கள் கீழ்ப்படிதலால் அவர்களுக்கு வயது வந்த பிறகு இந்த பிரிடிஷ் ராஜ்யத்தின் பல தேசங்களில் நியாயமாயும், கம்பீரமாயும் ஆளும் சக்தியை யடைகிறார்களென்றும் எடுத்துக் காட்டி, இந்திய மாணாக்கர்களுக்கும் அப்பேர்ப்பட்ட கடமைகள் வருங்காலத்தில் ஏற்படக்கூடியன வென்றும், அதற்காக இப்பொழுதே தான் தன்னையடக்கியாளுதலுக்குரிய வழிகளை அநுஸரித்தல் வேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

*
* *

மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரவர்கள் அக்டோபர்மீ 20உ பகல் 3 மணிக்கு திரிச்சிராப்பள்ளிக்குப் புறப்பட்டனர். இவ்வூரில் 18, 19உ களில் நடந்த பிரஹ்மஞானசபையானது அம்மையாரவர்களுடைய வரவால் பூர்ணம் பெற்றது. இறைவனருளாலும் மஹாத்மாக்களினருளாலும் எல்லாம் சுபமாய் நடைபெற்றன.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

# கல்வி கற்பித்தல் ஈசுவர கைங்கர்யமெனக் கருதல்.

பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவான் "எல்லாக் கர்மத்தையும் எனக்கு அர்ப்பணம் செய், எல்லாக் கர்மத்தையும் என் கைங்கர்யமாக நினை" என்றுபதேசித்துள்ளார். எல்லாத் தொழில்களிலும் கல்விகற்பிக்கும் தொழில் உயர்நலமுள்ளது. எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்றார் நம் தமிழ் நாட்டு அரசனாக இருந்த அதிவீரராமபாண்டியனார். யாதொரு பிரதிபலனும் கருதாமல், கல்வி கற்பிக்கும் உபாத்தியாயரே உயர்வானவரென்று கூறியுள்ளார். குரு சிஷ்ய சம்பந்தம் நம் தேசத்தில் மிகவும் உயர்நல முள்ளதென்றும், மிகவும் உத்தரவாதமானதென்றும், நம்மவர்களால் கருதப்படுகின்றது. இக்காலத்தில் காலக்ஷேபம் செய்தல் மிகவும் கஷ்டமாக விருக்கின்றமையாலும், முன்போல், இராஜாக்களும் செல்வர்களும் வித்வான்களையும் அறிஞர்களையும் உபாத்தியாயர்களையும் ஆதரிக்காமலிருக்கின்றமையாலும், கல்வி கற்பிக்கும் தொழிலை, இலவசமாய், யாதொரு பிரதிபலனும் எதிர்பாராமலும் பெறாமலும் நடத்துவது முடியாத கார்யமாக விருக்கிறது, பிரதி பலன் பெறாமல் செய்வது கூடாததாக இருக்கிறது. அதனால், உபாத்தியாயர்களுக்கு உலக யாத்திரைசெய்வதில் உடை, உணவு, உறையுள் (வீடு) வேண்டப்படுகின்றன. அதனால், இக்காலத்தில் முன் போல யாதொரு பிரதிபலனும் பெறாமல் உழைப்பது கூடாததாகவிருக்கிறது. அதனால் அவ்வளவு கௌரவமுடையதாக அத்தொழில் கருதப்படவில்லை. சம்பளத்திற்கு இக்காலத்து உபாத்தியாயர்கள் தொழில் நடத்தவேண்டியதாக இருக்கிறது. ஆனாலும், அடியிற்கண்ட சில உண்மைகளை * அநுஷ்டானத்தில் கொண்டுவருவார்களாகில், ஏறக்குறைய முன் போல் இத்தொழிலும் நன்குமதிக்கப்பெற்று வரும்.

உபாத்தியாயருடைய உத்தியோகம் மிகவும் சிரேயஸ்கரமானது, ஜநஸமூகத்திற்கு நலம் பயக்கும் தொழில்களில் முதன்மையானது. சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் கல்வி கற்பித்து அதன் மூலமாய் நற்சீலம் அவர்களிடம் அமையும்படி உபாத்தியா

---

* இந்த உண்மைகள் ஸ்ரீமாந் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சமீபத்தில் அருளிய, "கல்வி கற்பித்தல் ஒரு ஈசுவர கைங்கர்யம்" என்ற நூலினின்று எடுத்துச் சுருக்கி எழுதப்பட்டிருக்கின்றன.

யர் செய்கின்றார், தேசத்திற்கு நன்மக்களை உண்டுபண்ணும் கைங்கர்யத்தைச் செய்கின்றவராவர். இதனாலன்றோ முற்காலத்தில் நமது தேசத்தில் வஸிஷ்டர், வாமதேவர் முதலான மஹாிஷிகள் போன்ற புரோகிதர்களே கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்களாக அமைந்தனர். பாடசாலையும் தேவாலயத்தின் ஒரு பாகமாகவும் ஏற்பட்டது. உபாத்தியாயரிடம் பூர்ண நம்பிக்கைவைத்துப் பெற்றோர் தங்களுடைய புத்திரர்களை அநேக வருஷங்கள் அவர்களுடன் வசிக்கும்படியாக ஒப்புவித்துவிடுவார்கள். உபாத்தியாயர்களும் சிஷ்யர்களும் ஒரு குடும்பமாக அமைந்து வாழ்வார்கள். இதுவே குருகுலவாஸ மெனப்படும். இத்தகைய குருகுலவாஸ தர்மத்தைத் திரும்பவும் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர வட இந்தியாவில் "ஆரியஸமாஜத்தார்" என்ற ஓர் ஹிந்துமதஸம்பிரதாயிகள் சில காலமாக முயன்றுவருகின்றார்கள். இம்முயற்சி இந்தியாதேசம் முழுவதும் பரவினால் இந்தியாதேசத்தின் கல்விமுறை நலம்பெறும். அதனால் இந்திய ஜனஸமூகம் ஒருங்குபட்டு முன்போல் மஹிமையுள்ளதாக அமையும் என்பதை அறிஞர் எதிர்பார்க்கின்றார்கள்.

## 1. அன்பு.

உபாத்தியாயர் அநுஷ்டிக்க வேண்டிய தர்மங்களில் அன்புடைமை என்பது மிகவும் முக்கியமானது. அஃது உபாத்தியாயரிடமிருக்குமாயின் மற்றெல்லா நலன்களும், குரு சிஷ்ய சம்பந்தத்தால் தானே பெருகுவனவாகும். அஃதின்றேல் உபாத்தியாயரிடம் மற்ற எக்குணங்கள் இருக்கினும் அவை பிரயோஜனமின்றாம். ஒருவன் அன்பில்லானாயின் அவன் கல்வி கற்பிக்கும் தொழிலை ஏற்றல் கூடாது. அத்தொழிலை நடத்தும்படி பிறர் இடங் கொடுக்கவும் கூடாது. ஒருவன் அன்புளன், அன்பிலன் என்று அறிதல் எங்ஙனம்? இளமைப் பருவத்தில் ஒவ்வொருவனும் இயற்கையாய் ஒரு தொழிலுக்குத் தகைமையுடையவன் என்று நாம் அறிவது போல ஒருவன் சுபாவத்தில் அன்பு என்ற தர்மம் விசேஷமாய் அமைந்துளதோ இல்லையோவென்று நாம் எளிதில் அறியக்கூடும். அந்தந்த உத்தியோகத்திற்கு அததற்கேற்ற தகைமையுள்ள இளைஞர்களைத் தேர்ந்தெடுத்துப் பழக்குவது போல உபாத்தியாயர் அல்லது ஆசிரியர் என்ற உத்தியோகத்திற்கும், அன்பு என்ற தர்மத்தை விசேஷ

மாக உடைய இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து உபாத்தியாயர்களாகப் பழக்கவேண்டும்.

மேலும், பலவாறான உத்தியோகங்களுக்குப் பயன்படும்படியாகப் பல வாலிபர்கள் பாடசாலைகளில் கற்கின்றார்கள். இனி அவர்கள் ஜனஸமூகத்திற்கு நலம்படவாழவேண்டிய மனிதர்களாவார்கள். அத்தன்மையான நிலைமை பெறுதற்கு வாலிபர்கள் பாடசாலையில் கழிக்கும் காலம் சந்தோஷகரமாக இருத்தற்பாலது. இயற்கையாய்க் குழந்தைகள் சந்தோஷமாகவே இருப்பார்கள். அச்சந்தோஷ சுபாவம் பள்ளியினும், இல்லத்திலும் மாறாமல் என்றும் நடைபெறும்படியாகச் செய்தல் நம்முடைய கடமை. அவ்விதம் வாலிபர்கள் நடத்தப்படுவார்களாகில் வயது வந்த மேல் மனிதராக ஆகும் பருவத்தில் பிறரையும் சந்தோஷிக்கச் செய்வார்கள். அன்புடைய உபாத்தியாயரைச் சிறுவர்களும் சிறுமிகளும் பிரியத்துடன் அணுகுவார்கள். அத்தன்மையான உபாத்தியாயர்கள் நடத்தும் பள்ளிக்கூடத்தில் கல்விகற்றல் வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் இருக்கும். என் குருநாதன் சொல்லுகிறதாவது:—

"குழந்தைகள் விஷயங்களைத் தெரிந்துகொள்ள மிகவும் அவாவுள்ளவர்கள். அவர்கள் கற்றலில் பிரியப்படும்படியாக உபாத்தியாயர் செய்யமுடியாமற் போனால் குற்றம் உபாத்தியாயரிடமேயல்லாமல் பிள்ளைகளிடமில்லை. உபாத்தியாயரும் அத்தொழிலை நடத்துவதற்கு அநர்ஹர்களாவார். உண்மையில் ஈசுவரனிடம் அன்புள்ளவர்கள் கல்வி கற்பித்தலில் பிரியம் பாராட்டி அத்தொழிலை நடத்துவதை ஓர் கைங்கர்யமாக நினைப்பார்கள். பசியுள்ளவன் உணவை நாடுவது போல அத்தன்மையர் அக்கைங்கர்யத்தை நடத்துவதற்குச் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார். அவர்களின் ஹிருதயத்தினின்று அன்பு நிறைந்து பொங்கி வழிந்து சுற்றுமுள்ளவர்களை நாடிச் செல்லும் தன்மையது. கல்வி கற்பித்தலை சிரேயஸ்கரமான உத்தரவாதமாக எண்ணுவதும் தவிர, அதில் மிக ஸந்துஷ்டி யுள்ளவர்கள் தான் உபாத்தியாயர்களாக அருஹர்களாவார்."

அன்புள்ள உபாத்தியாயர் தம் மாணாக்கனிடத்தில் குப்தமாக வுள்ள நற்குணங்கள் மலரும்படி செய்வார். உபாத்தியாயரின் சாந்தகுணமானது மாணாக்கனை நலப்படுத்தும். அதனால் மாணாக்கன் பயம் கொள்ளான். இப்படி நிகழ்ந்தால் ஒவ்வொரு மாணாக்கனுடைய இயற்கையான சுபாவம் வெளிப்படும். மாணாக்கனுக்கு உபாத்தியாயரிடம் பயமின்றேல் அவன் உள்ளத்திலுள்ள சுபாவங்கள் பளிங்கு போல் தெளிவாய் வெளிப்படும். அவைகளை மறைக்க நினையான். உபாத்தியாயர் மாணாக்கனின் யதார்த்த நிலைமையை அறிந்து அதற்கேற்ப அவனுக்கு அநுகூலமான முறையைக் கற்பித்தல் கூடும். இத்தகைய உபாத்தியாயரிடம் பயமில்லாமலும் கூசாமலும் மாணாக்கன் படிப்பு முறையில் தனக்குள்ள கஷ்டங்களைத் தெரிவிப்பான். உபாத்தியாயர் பிரியத்துடனும் சிநேகமாயும் அவைகளை ஆதரவுடன் கேட்டுத்திருத்துவார் என்ற நன்னம்பிக்கை கொண்டவனாக மாணாக்கன் இருக்கின்றமையால் தன்னுடைய குறைகளை ஒளியான். நல்ல உபாத்தியாயர் தம்முடைய வாலிபத்தில் தாமிருந்த நிலைமையை நன்றாய் நினைப்புக்கொள்ளுவார். அதனால் இப்போது தன்னிடம் கற்கும் மாணாக்கனின் மநநிலையை அறியக் கூடும். என் குருநாதன் சொல்லுகின்றதாவது:—“தன்னுடைய வாலிப நிலையை மறந்தவனும், அதனால் குழந்தைகளிடம் அன்புபாராட்ட இயலாதனும், குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதில் சாவதானம் பெறான். மாணாக்கனிடம் உபாத்தியாயர் அன்புவைக்க, மாணாக்கன் உபாத்தியாயரிடம் அன்புபாராட்டுவான். உபாத்தியாயரையே நம்பினவனுப் அவரிடத்தில் வைக்கும் அன்பானது பக்தியாக விரியும். இவ்விதம் ஜநிக்கும் பக்தியானது வரவர அகன்று வளரும். எங்கெங்கே உயர்நலம் தோன்றுகிறதோ அங்கங்கே எல்லாம் பக்தி பாராட்டும் இயல்பை மாணாக்கன் பெறுவான். காலக்கிரமத்தில், அந்த பக்தி பூர்ணமாகி மஹாத்மாவின் பாதாரவிந்தங்களில் சேர்ப்பிக்கும். உபாத்தியாயரிடம் மாணாக்கன் அன்புள்ள

ளுகில் பண்பும் பணிவு முள்ளவனுக அமைவான். அவனே நல்வழிப் படுத்தல் இலகுவாம். தண்டனை என்ற வார்த்தைக்கே இடமில்லை. ஆகவே குரு சிஷ்ய சம்பந்தத்தை விஷப்படுத்தும் காரணமான தண்டனை ஒழியவே பயமும் நீங்கும். உண்மையான மஹாத்மாக்க ளிடம் சிஷ்யனுக அமையும் பாக்கியத்தைப் பெற்ற நம் போலியர் கள் குருசிஷ்யசம்பந்தம் இத்தன்மையதாக இருக்கவேண்டுமென அறிவார்கள். மஹாத்மாக்கள் சிஷ்யர்களை நடத்தும் முறையில் காட்டும் அருமையான பொறுமையும், சாந்தமும், ஆதரவும் என் னென்று சொல்லுவோம். சிஷ்யர்கள் குற்றங்கள் செய்தாலும் அவர்கள் மநம் நோகார். ஆயினும் சாதாரண உபாத்தியாயருக்கும் அவரது மாணுக்கனுக்கும் உள்ள சம்பந்தத்தைவிட மஹாத்மாக் களுக்கும் அவர்களுடைய சிஷ்யர்களுக்கும் உள்ள சம்பந்தம் எத் தனேயோ மடங்கு பெருகியது. ஒரு தேசம் நலம் பெறவேண்டு மென்றும், அதற்காக உபாத்தியாயரின் தொழிலே ஒரு கைங்கர்ய மாக நடத்துகிறதாகவும், அதற்காகத் தான் தியாகம் செய்யவேண்டு மென்றும் நல்ல உபாத்தியாயர் நினைப்பார். மஹாத்மாவோ உலகத்தி லுள்ள மனிதவர்க்கமே நலம் பெற வேண்டுமெனத் தம்மை அக் கைங்கர்யத்திற்குத் தியாகம் செய்துகொள்ளுகின்றூர். கல்வி கற் பித்தல் ஈசுவர கைங்கர்ய மெனக் கருதல் ஒவ்வொரு உபாத்தியா யரும் தம் தொழிலில் ஸித்திபெறவேண்டுவதற்கேதுவான முதன் மையாய்க் கவனிக்கவேண்டிய இரகஸியமாம்.

ஓம் தத் ஸத்.

ப. நாராயண ஐயர்.

---

## நன்மொழி.

பிறரைப்பற்றி நீ நினைக்கும் ஒவ்வொரு நினைப்பும், கூறும் ஒவ்வொரு கூற்றும், அவ்விதமே பிறரும் உன்னைப்பற்றி நினைத்திருக்கவும் கூறியிருக்க வும் கூடுமென் றுணர்வாயாக.

## துகாராம்பாவாவின் சரித்திரம்.

(216-ம் பக்கத்தொடர்ச்சி.)

253

துகாராமருக்கு எந்த எந்த சிஷ்யர்கள் எந்த எந்த சமயத்தில் உண்டானார்கள் என்பதை கொஞ்சம் பிரஸ்தாபிப்போம். துகாராமர் குருவை அடைந்தது ஸ்வப்நத்திலேயே. அவருக்கு ஒருநாள் என்ன ஸ்வப்நம் நேர்ந்ததெனின்:—இந்திரியாணீ நதியில் ஸ்நாநம் செய்து கையில் துளசிதளங்களை எடுத்துக் கொண்டு விட்டோபா கோவிலுக்கு நடந்து கொண்டிருக்கையில், அவரை ஒரு பிராமணர் சந்தித்தார். அப்போது வழக்கம்போல் அந்தப் பிராமணருடைய காலில் துளசி பத்திரத்தைப்போட்டு, ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தார். அந்த பிராமணர் சந்தோஷமடைந்து அவர் தலையில் கையை வைத்து, அவருக்கு இராமகிருஷ்ண மந்திரத்தை உபதேசித்தார். தங்களுடைய குரு பரம்பரை என்னவென்று துகாராம் கேட்டதற்கு "இராகவசைதன்னியம் என்ற வைஷ்ணவபக்தரின் சிஷ்யர் சைதன்னிய கேசவன் என்றொருவரிருந்தார். அவர் என்னுடைய குரு, என் பெயர் பாபாசைதன்னியர்" என்றார். பிறகந்த குருவைப் பார்த்து, "ஸ்வாமி! என்னுடைய வீட்டில் உங்களுடைய பவித்திரபாதங்களின் தூளி படவேண்டும். உங்களுக்கு வேண்டிய சாமக்கிரிகளைக் கொண்டுவந்து கொடுக்கிறேன். உங்கள் கையால் ஸ்வயம்பாகம் செய்து இஷ்டப்படி புஜிக்கவேண்டும்," என்று சொன்னார். தனக்கு கால் சேர் நெய் கொடுத்தால் தான் வருவதாய் அந்தப் பிராமணன் சொன்னார். அப்படியே கொடுப்பதாய் ஒப்புக்கொண்டு, அவருடைய கையைப் பிடித்துத் தன் வீட்டுக்கு துகாராம் அழைத்துக் கொண்டு வந்தார். தன் மனைவியைக் கூப்பிட்டு, "இந்த பிராமண சிரேஷ்டர் வந்திருக்கிறார், அவருடைய சாப்பாட்டுக்கு வேண்டிய சாமான்களைக் கொடுத்து அவர் கேட்கும் நெய்யையும் சேர்த்துக் கொடுக்கவேண்டும்" என்று சொன்னார். இந்த வார்த்தையைக் கேட்டவுடன் அவலாபாயி அம்மாள் வெகு கோபங்கொண்டு சொன்னாள்:—"நீர் கண்ட சமயத்தில் எல்லாம் எந்த பிராமணரையாவது வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்து அவருக்கு பாத்திரங்கள் கொடுக்கும்படி சொல்லுகிறீர். என்னுடைய பாத்திரங்களையே ஜனங்கள் முன்னமேயே உடைத்து, எறிந்து விட்டார்

கள். இப்படி வூதா யாரையாவது அழைத்து வருவீரேயானால் என் சம்சாரம் தான் எப்படி நடக்கிறது?" இந்த கோபமான வார்த்தையைக் கேட்டு அந்தப் பிராமணர் புறப்பட்டுப் போய்விட்டார்.

இப்படி ஸ்வப்நம் கண்டு துகாராம் திடீரென்று விழித்துக் கொண்டார். "என் ஸம்ஸாரத்தின் கெட்ட ஸ்வபாவத்தால் எனக்குக் கிடைத்த சற்குருவின் ஸஹவாஸமும் போய்விட்டது. நான் ஏன் இந்த சம்சாரத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறேன்!" என்று தமக்குள்ளேயே சிந்தித்துக் கொண்டிருந்தார். இந்த மாதிரியாய் மநங் கலங்கி யிருந்த சமயத்தில் ஏழு கவிகளைப் பாடினர்.

இவ்விதமாக ஸ்வப்நத்தில் குருவை வாஸ்தவமாய் அடைந்ததாக பாவித்து துகாராம் விட்டலரிடத்தில் பக்தியை விசேஷமாய் மாணம் வரையில் காண்பித்தார். மனிதன் எவ்வளவு ஞானம் சம்பாதித்திருந்தாலும், ஈசுவரனிடத்தில் பக்தியை உடையவனாயிருந்தாலும், குருவை அடைந்து அவரிடம் உபதேசம் பெற்றுக்கொள்ளு முன் தர்மத்தின் நிஜமான இரகஸியம் தெரிய வருகிறதில்லை. தெரியாதவரையில், இஷ்டப்படுகின்ற கைவல்லியம் கிடைக்கத்தக்க மார்க்கத்தின் மேல் ஆசைப்பட நியாயமேயில்லை, யென்று எல்லாரும் அறிந்த விஷயமாகையால் துகாராமர் குரு பிரசாதத்தை அபேக்ஷித்தது சகஜமே. குருவன்றி எந்த ஆசாரணையும் உபயோகமற்றது என்ற நிச்சயபுத்தியுடன், இரவும் பகலும் குருவை அடைய வேண்டும் என்ற தியானமே மேலிட்டு கடைசியில் ஸ்வப்நத்தில் குரு தர்சநம் கிடைத்தது. இந்த ஸ்வப்ந குருவும் அவருக்கு இஷ்டமான மந்த்ரத்தை உபதேசித்தபடியால் தான் கிருதார்த்தன் என்று நினைத்து வேறு குருவைத் தேடும் புத்தியை விட்டுவிட்டார். பரமயோக்கியனை அவருக்கு ஜாக்கிரதகாலத்திலும் ஸ்வப்நகாலத்திலும் எந்த அநுபவம் ஏற்படுகிறதோ அதெல்லாம் ஈசுவர மாயையின் காரியம்; ஆகையால் அதை வியவஹாரத்தில் சத்தியம் போல் பாவித்தே நடக்கவேண்டியது. இப்படியே இந்த ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டிப்போகவேண்டும், இது கஷ்டமான காரியம். இப்படி பாவிக்கும் சிஷ்யன் எந்த குருவுக்குக் கிடைக்கிறானோ அந்த குரு மகா தந்யன். இப்போது சாதாரணமாய் குருவாக

விளங்குகிறவன் ஔபசாரிகமாகவே விளங்குகிறான். சிஷ்யனுக்கு அப்பிரியமான விஷயத்தைச் சொல்லுவதும், சிஷ்யன் அந்த நிறை வேற்றுமலிருப்பதும் நாமறிந்திருக்கிறோம். சில குருக்கள் ஸாமாந்ய ஞானமுள்ளவர்களா யிருக்கிறார்கள். சிலவிடங்களில் குருவினிடத் தில்விட சிஷ்யனிடத்தில் அதிக யோக்யதையும் காணப்படுகிறது.

இந்த பிரஹ்ம நிஷ்ட மகாபுருஷனுடைய அத்தியந்த சுத்த ஆசாரணையினாலும், அவருடைய பிரியமான உபதேசத்தாலும் வெகு ஜனங்களின் மனது இவரிடம் திரும்பி இவர் பஜனையில் சேர்ந்தார் கள். பதினாறு பெயர்கள் மட்டும் சர்வகாலமும் அவருடனேயே இருந்து விட்டார்கள். அவர்களில் கங்காதரபந்தமவாள,கடேசகர இவ ர்கள் பிராமணர்கள். சந்தாஜி ஜகனடே சாகணகர, இவன் வாணி யன். இராமேசுவரபட்டர், கோண்டபட்டர் (பௌராணிகர்). சிவாஜி (வளையற்காரன்) . நாம்வஜி (தோட்டக்காரன்). இவர்களில் கங் காதரபந்தமவாள என்பவர் துகாராமருடைய அலௌகிகமான குண விசேஷங்களைக் கண்டு அவருடைய வைராக்கிய உபதேச த்தால் தான் விரக்தியடைந்து, ஸகலஸம்ஸாரத்தையும் விட்டு அவரிடத்திலேயே எப்போதும் வசித்தார். தான் பிராமணன் என்ற அபிமானத்தை விட்டு ஸத்ஸங்கத்தாலும் ஸஜ்ஜநங்களின் வசநங்களைக் கேட்பதினாலும் தன்னுடைய காலம் ஸார்த்தகமாகும் என்று நினைத்து அவர் துகாராமர் கூடவே இருந்துவிட்டார். அவர் துகாராமருக்குப்பின் தாளத்துடன் நிற்பார். துகாராமர் கவநம் செய் யும்போது உடனே அக்கவநங்களை எழுதிக்கொள்ளும் பொருட்டு பேனமைக்கூட்டுடன் தயாராயிருப்பார். பஜனை செய்யுங்காலத்தில் துகாராம் தற்காலத்தில் செய்யும் கீர்த்தனங்களை மனதில் வைத்துக் கொண்டு பஜனை முடிந்தவுடன் புஸ்தகத்தில் எழுதிவைப்பார். இவ் விதமாக இப்போது ஜநங்களுக்குக் கிடைத்திருக்கும் கீர்த்தனங்க ளெல்லாம் இந்த கடேசகர பிராமணன் எழுதிவைத்தவைகளே.

சந்தாஜிஜகன்னடே என்பவன் வாணியன். இவன் சாகண கிராமத்தில் வசித்து வந்தவன். இவன் துகாராமருக்குப்பின் நின்று பாடுவான்.

மூன்ருவதான இராமேசுவர பட்டரைப்பற்றி முன்னமேயே எழுதப்பட்டிருக்கிறது. முன்தான் உபத்திரவங்களை துகாராமருக்குச் செய்திருந்து இப்போது சகல அபிமானத்தையும் விட்டு சர்வ காலமும் அவர் சந்நிதானத்திலேயே இருக்கத் தொடங்கினர். துகாராமருடன் வாதம் செய்ய எவனுவது வந்தால், இவர் சமாதானம் சொல்லுவார்.

நான்காவது சிஷ்யர் பௌராணிக கோண்டபட்டர். இவர் துகாராமரை அடைந்தது மெத்த ஆச்சரியம். சிவாஜி மகாராஜாவிடம் ஒரு பண்டிதர் இருந்தார். அவரிடம் இந்த பிராமணன் ஒரு ஜாகீர்தார் போலிருந்தார். தன் குருவைப்போல தான் ஞானமடைந்து புராணங்களைச் சொல்ல வேண்டும் என்ற ஆசை இவருக்கு உண்டாயிற்று. ஒரு சமயத்தில் இந்த பிராமணன் துகாராமரிடம் வந்து வந்தனம் செய்தார். அப்போது துகாராமர் அந்த பிராமணனுக்கு ஒரு தேங்காயையும் 11 அபங்கங்கள் எழுதி வைத்த ஒரு காகிதத்தையும் கொடுத்தார். கோண்டபட்டர் இந்த அபங்கங்களை மறுபடியும் மறுபடியும் வாசித்து மநநம் செய்து துகாராம் கொடுத்த தேங்காயைப் பிரசாதமாக பாவித்து உடைத்தார். உள்ளே வெகு விலைபெற்ற நவரத்திநங்கள் அகப்பட்டன. இந்த தேங்காயின் கதை எப்படி எனின், அமதாபாத் என்ற வூரில் ஒரு வர்த்தகன் ஞானதேவரைக் குறித்து ஒரு பிரார்த்தனை செய்திருந்தான். அதாவது தன்னுடைய இஷ்ட காரியத்தில் தனக்குக்கீர்த்தி கிடைக்கும் பக்ஷத்தில் ஒரு லக்ஷரூபாய்க்கு நவரத்திநங்களை ஆளந்தி கிராமத்தில் சமாதியின் பேரில்கொண்டுவந்துவைப்பதாகப் பிரதிக்ஞை செய்தான். அப்படியே அக்காரியம் சித்தித்தவுடன் தன் பிரார்த்தனையை முடித்துக்கொண்டுவரும்பொருட்டு ஆளந்திக்கு வந்த சமயத்தில், தேஹூகிராமத்தில் துகாராம் இருக்கிறார், அவருக்குக் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும் என்பதாய் அவனுக்கு உத்தரவாயிற்று.

அப்படி அந்த யோக்கிய வர்த்தகன் தேஹூவுக்குப்போனன். ஆனல் துகாராமரின் விசேஷவிரக்தியை அவன் கேட்டிருந்தான். இந்த இரத்தினங்களை அவருக்குக் கொடுத்தால் அவர் வாங்கமாட்டார் என்பதை அவன் நன்ருய் அறிந்திருந்தான். ஆகையால்

அவன் என்ன யுக்தி செய்தானெனின், ஒரு தேங்காய் வாங்கி உள்ளே இருக்கும் பருப்பை சுரண்டி எடுத்துவிட்டு அதில் முத்துக்கள், இரத்தினங்கள் இவைகளைப் போட்டு அத்தேங்காயின் கண்ணை மூடிவிட்டான். துகாராமரிடம் போய் அந்தத் தேங்காயை முன் வைத்தான். ஒரு சிஷ்யன் அந்தத் தேங்காயை சாதாரண தேங்காய் போல் பாவித்து உள்ளே எடுத்து வைத்தான். தன்னுடைய யுக்தி பலித்ததைக் கண்டு சந்தோஷமடைந்து அந்த வர்த்தகன் பேசாமல் திரும்பிப்போய்விட்டான். இப்படியிருக்க, ஆளந்தியில் ஒரு பிராமணன் தனக்கு வித்தை லபிக்கவேண்டுமென்று ஞானதேவருடைய சமாதியில் பழிகிடந்தான். துகாராமரிடம் போகும்படி அவனுக்கு உத்தரவாயிற்று. அதின்பேரில் அவன் துகாராமரிடம்போய் தனக்கு உண்டான உத்தரவைச் சொல்லி அநுக்கிரகிக்கும்படி கேட்டுக்கொண்டான். அப்போது துகாராம் 11 அபங்கங்களை ஒரு காகிதத்தில் எழுதிக்கொடுத்து அந்த வர்த்தகன் கொடுத்த தேங்காயையும் கொடுக்கும்படி சொன்னார். அந்தப் பிராமணனுக்கு இந்த இரண்டும் பிடிக்கவில்லை. அந்த அபங்கங்களையும் தேங்காயையும் அவ்விடமே வைத்து விட்டு மநஸ்தாபமாய் அந்த பிராமணன் திரும்பிப் போய்விட்டான்.

ஸம்ஸ்கிருத பாஷையில் விசேஷ ஞானமடைந்து உலகத்தில் பண்டிதன் என்ற பெயரை அடைந்து கீர்த்தி சம்பாதிக்க வேண்டும் என்ற இச்சை இருக்க இந்த பிராகிருத சுலோகங்களால் என்ன ஆகும் என்று அவைகளை திரஸ்காரம் செய்து போய்விட்டான். பிறகு துகாராம் ஞானதேவரை உத்தேசித்து இன்னும் 13 அபங்கங்களைச் செய்து பிறகு கோண்டபட்டர் வந்த சமயத்தில் இந்த தேங்காயையும் அபங்கங்களையும் அவருக்களித்தார். இவர் ஒரு சித்த புருஷன். இவரிடம் வசிக்கிறவனுக்கு கலியாண்மே கிடைக்கும் என்று அவருக்குத் தோன்றி அவர் அப்படியே வந்துசேர்ந்தார். இராமேசுவரபட்டருடைய சஹாயத்தால் ஸம்ஸ்கிருதபாஷையில் ஞானமடைந்து அவரைப்போலவே வேதாந்தியானர். சர்வகாலமும் துகாராமருடனேயே இருந்து வந்தார்.

ஐந்தாவது சிஷ்யன் சிவாஜீ. இவன் வளையற்காரன். இவன் லோஹ என்னுமூரில் வசிக்கிறவன். இந்த ஊரிலிருப்பவர்கள் அநேகமாய் எல்லோரும் துகாராமரை அடிக்கடி வரவழைத்து பஜனைகளைச் செய்து வைப்பார்கள். தங்களுடைய சக்திக்குத் தக்கபடி சமாராதனைகளைச் செய்து வைப்பார்கள். அநேகமாய் எல்லாரும் துகாராமருடைய சிஷ்யர்களே. சிவாஜி என்பவன் மட்டும் துகாராமரை ஹேளநம் பண்ணிக்கொண்டிருந்தான். அவருடைய கீர்த்தனங்களைக் கேட்டவர்களைக் கூட ஹேளநம் செய்வான். துகாராம் ஒரு சமயத்தில் லோஹ கிராமத்திலிருக்கும்போது அவரைத்தேடிக் கொண்டு ஒரு பிராமணன் வந்து அவரிடம் சொன்னதாவது:— “எனக்கு வெகு கடன் இருக்கிறது. அதைத் தீர்க்கும் பொருட்டு ஆளந்தி வழியாய்க் கடந்தேன். அப்போது தங்களிடம் போகும்படி உத்தரவாயிற்று. அப்படியே வந்திருக்கிறேன். என்னை தயவு செய்து ருணத்தினின்றும் விடுவிக்கவேண்டும். நான் ஒன்றுமில்லாதவன்” என்றான். இந்தச் சங்கடத்தைப் பார்த்து பரமகிருபாளுவாயும் பகவத் பக்தனுயுமிருக்கிற அந்தத் துகாராம், இவனுக்குப் பணம் சேகரம் பண்ணிக் கொடுத்து இவனை அனுப்பி விடும்படி அங்கிருந்த ஜனங்களுக்குச் சொல்லவே அவர்கள் ஊரிலுள்ள ஜனங்களிடத்தில் யாசகம் வாங்கி அவன் கடனைத் தீர்த்துவிட்டார்கள். அந்தப் பிராமணன் வெகு சந்தோஷமடைந்து துகாராமரையும் லோஹ கிராமத்து ஜனங்களின் நல்ல மாதிரியையும் ஸ்துதித்து ஊருக்குப் போய்விட்டான். இந்த விருத்தாந்தங்கள் முழுமையும் இந்த வளையற்காரனுக்குத் தெரிந்தவுடன், அவனுக்கு துகாராமரிடமிருந்த விருத்தபுத்தி கம்பிப்பட்டது. இப்படிப்பட்ட மஹாபுருஷனை துவேஷிக்கிறதில் யாதொரு பிரயோஜநமுமில்லை என மனதில் விசாரித்து துகாராமரைச் சேவிக்க ஆரம்பித்தான். பிறகு இவன் சரக்கு வாங்கி வரும்படி 36 மாடுகளையும் குமஸ்தாவையும் பம்பாய்ப்பட்டணத்துக்கு அனுப்பினான். அவன் சரக்கை வாங்கி வந்தபின் பார்க்க, அம்மூட்டைகளில் சரக்கில்லாமல் வெள்ளி காணப்பட்டது. சிவாஜீ வியாபாரிகளுக்கு சரக்கை அனுப்புவித்தீர்களா, வேறு ஏதையாவது அனுப்பிவைத்தீர்களா என்று கேட்டு அனுப்ப அவர்கள் சரக்கைத்தான் அனுப்பி

னோம். வேறு ஒன்றும் அனுப்பவில்லை என்றார்கள். பிறகு துகாராமரிடம் வந்து அவன் கேட்க, அவருக்கு தற்செயலாய் தனம் கிடைத்திருக்கிறபடியால் அதை சத்விஷயத்தில் உபயோகப்படுத்தும்படி சொன்னார். அப்போது அவன் ஜநங்களுடைய உபயோகத்திற்காக ஒரு பெரிய கட்டிடம் கட்டினான். அதற்கு வளையற்காரன் கட்டிடம் என்று பெயர். அப்படி விசேஷமாய் பிராமண போஜனங்களையும் தாந தர்மங்களையும் நடத்தினான். இவ்வளவு வைபவம் கிடைத்தும் அவன் அதில் மயங்கி சம்சாரத்தில் விழவில்லை. அவனுடைய மனதில் வைராக்கியம் செவ்வையாக ஏறி அவன் வீடு வாசல் விட்டு துகாராமர் மாதிரியாகவே இருந்துவிட்டான். இந்த வைராக்கியம் அவனுடைய பாரியைக்குச் சுத்தமாய்ப் பிடிக்காமல் அவள் துகாராமரை த்வேஷிக்க ஆரம்பித்தாள். தன் பர்த்தாவை தன்னுடன் சேர்த்துக் கொண்டு அவரை பைத்தியகாரனாக்கிவிட்டபடியால் எவ்விதத்திலாவது துகாராமரை நாசம் செய்து விடவேண்டியது என்று நினைத்தாள். ஒருநாள் துகாராமரை அவள் வீட்டுக்கு வரவழைத்து ஆசனப்பலகையின் மேல் உட்காரவைத்து ஸ்நாநஞ்செய்து வைக்கிறேன் என்று சொல்லி மிகவும் சுட்டுக்கொண்டிருக்கும் ஜலத்தைக் கொண்டு வந்து அவர் மேல் ஊற்றினாள். அவர் உடம்பு எல்லாம் தபித்துப்போய் விட்டது. அந்த வேதனைபட்டுக் கொண்டிருக்கும்போதே அவர் ஒரு கவநம்செய்தார். பிறகு அவளுக்கு ஒரு சிரங்கு புறப்பட துகாராமரை எவ்விடம் ஸ்நாநம் செய்து வைத்தாளோ அவ்விடத்திய மண்ணை எடுத்துப்பூச அந்த சிரங்கு அநுகூலமாய் விட்டது. இதன்பேரில் அவளுக்கும் பக்தி ஜநித்தது. அவளும் துகாராமருடைய கீர்த்தனைக்குப் போகத் தொடங்கினாள். தன்புருஷனைப் போலவே சேவைசெய்யவும் ஆரம்பித்தாள்.

முன் சொன்னவர்களில் நாம்வஜி என்றதோட்டக்காரன் துகாராமருடைய பஜனைக்குத் தவறாமல் வந்து கொண்டிருந்தான். ஒருநாள் துகாராம் பஜனை செய்து வருகையில் இவன் மத்தியில் எழுந்து அவரைப்பார்த்து, சுவாமி! உமக்குச் சிரமமாயிருக்கும், நீங்கள்

உட்காருங்கள் நான் பஜனை செய்கிறேன் என்று சொன்னான். உடனே துகாராம் உட்கார இவன் விட்டல் நாமஸ்மரணையை வெகு ஆவலுடன் செய்து பிரமாநந்தத்தில் முழுகிப்போனான். அவன் திருப்தியாகும் வரையில் நாமஸ்மரணை செய்த பின் துகாராம் எழுந்திருந்து தன் பஜனையை முடித்தார். இந்த தோட்டக்காரன் புஷ்ப ஹாரங்களைக் கொண்டு வந்து ஸத்ஜநங்களுடையவும் பிராமணர்களுடையவும் கழுத்தில் போடுவான். பக்திரஸத்தில் முழுகிப் போன ஸமயத்தில் மத்தியில் எழுந்து கூத்தாடுவான்.

இப்படி முன் சொன்ன 4 சிஷ்யர்களும் துகாராமரை எப்போதும் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். எப்போதாவது அவர் எங்கேயாவது போய்விட்டால் உடனே தேடுவார்கள். பஜனை சமயத்தில் ஒருவன் பின்நிற்பான். ஒருவன் ஸபை ஏற்பாடு செய்வான். இப்படி எந்த விதத்திலும் அவருடைய சுசுரூஷை செய்து கொண்டு வருவார்கள். இவர்களுடைய நல்ல மாதிரியைப் பார்த்து துகாராமரும் சந்தோஷமாயிருந்தார். துகாராமருடைய பக்திக்குத் தக்கபடி சிஷ்யர்களும் ஏற்பட்டார்கள். இந்த துகாராமருடைய கீர்த்தனைகளைக் கேட்டபின் பண்டரீபுரத்துக்கு போகும் பக்தி ஜநங்களுக்கு விசேஷமாய் ஜநித்தது. சுமார் 1000 அல்லது 1500 பேர்கள் துகாராமருடன் பண்டரீக்குப் புறப்படுவார்கள். இப்படியே அவர் காலம் செல்லும் வரையிலும் நடந்து வந்தது. பிற்காலத்திலும் தலைமுறை தலைமுறையாய் இப்படியே நடந்து வந்தது. துகாராமரிடம் வாஸ்தவமான மஹத் யோக்கியதை இருந்தமையால் அல்லவோ இத்தனை ஜநங்கள் அவரைக் கொண்டாடினார்கள், இன்னும் கொண்டாடிக்கொண்டு வருகிறார்கள்.

(இன்னும் வரும்)

A. சிவராவ்.

# ஸ்ரீ தேவாபி சோடசகலா மாலை.

திருவள ரசலங் களுக்குநா யகமாய்ச்
சிறந்திடு மிமயவாள் சிலையின்
மருவுமோர் வெள்ளி யம்பலத்தமர்ந்து
மாநுட நல்வழி யொழுகி
யிருவினை யொப்பு மலபரி பாக
மெய்திமேற் கதியுறற் கிசைந்தே
யொருகுரு வாகி மருவுதே வாபி
யுயர்பத மனத்து வாழியவே. (1)

அறிவையே யறிவா யறிபவ ருளத்து
மறிவிலா வஞ்சர்க ளகத்தும்
பிறிவற நிறைந்தாங் கவரவ ருளத்துப்
பிரக்ஞையா யொளிருமச் சிவமே
குறிகுண மமைந்தன் பருக்கெலா மதத்துக்
கொள்கையு மொன்றென வுணர்த்தி
யறிஞரா வமைத்த வண்ணல்தே வாபி
யடிமலர் மனத்துவா ழியவே. (2)

உள்ளுவா ருளத்தும் புறத்துமுள் ளதுமா
யுணர்வுமா யொப்பிலா னந்த
வெள்ளமு மாய விமலபூ ரணமே
வினைசெயற் காகனம் மருங்கிற்
கள்ளவிழ் குழலாள் தாங்குருக் களங்கங்
கரந்துநிட் களங்கனாய் ஞாந
வள்ளலா யெழுந்த விகிததே வாபி
மலர்க்கழன் மனத்துவா ழியவே. (3)

அருளெலாம் பொழியும் கருணைவான் முகிலே
யாதியே யென்மனத் தெழுந்த
விருளெலா மகற்றி யிருவினை மாய்த்தே
யின்பவீ டடைவதற் கிசையா
மருளெலா மொளித்து வானவ ரீட்ட
வரிசையிற் கூட்டிமா வாக்யப்
பொருளெலா மருள வந்ததே வாபி
பூங்கழன் மனத்துவா ழியவே. (4)

இருமையு மகன்ரூ ரன்புரு வாய
விருடிகண் மனத்துறை பவனே
கருமையார் பையிற் கட்டுனு மாங்கு
காத்துமீர்த் தெற்குமேற் சிறந்த
பெருமையாம் வாழ்வை யழிப்பதற் கைய
பித்தவா தனையொழித் தின்னு
னருமைசேர் குருவா யமர்ந்ததே வாபி
யருட்கழன் மனத்துவா ழியவே. (5)

மாதர்பொன் பூமி மக்களா திகளும்
வானவர் வாழ்வுமேற் பதங்கள்
காதல்கொள் பூசை தவவிர தங்கள்
கருதிடிற் பந்தமா மெனவும்
வேதவே தாந்த ஞானமெய் யெனவும்
விளம்பிமா வாக்கியப் பொருளைப்
போதனை புரிய வந்ததே வாபி
பூங்கழன் மனத்துவா ழியவே. (6)

கண்டன வெல்லா மென்னுளு மென்னை
யாவுளுங் காட்டிமெய் வாய்ந்த
தொண்டருட் கூட்டி யானென தற்றுத்
தொழிலற்று மனமும்வாக் கற்று
விண்டலத் தமர்ந்தாங் குறுசுக வீடு
விரைந்துபா ரென்றகத் துறைத்தா
ளண்டருந் துதிக்கு மமலதே வாபி
யருட்கழன் மனத்துவா ழியவே. (7)

அரியய னரற்கு மேற்குரு மணியே
யருமையென் றறைதரு மறைக
ளுரிமையை யுணர்ந்தவ் வுணர்வையெற் குணர்த்தி
யோதினுய் முன்னொரு குருவாய்ப்
பிரியமுற் றின்னு மென்னையாம் பேசன்று
பேரமைத் தருளினை யினிமேற்
றுரிய மெய்ப் பதந்தர் தருளுதே வாபி
துணையடி மனத்துவா ழியவே. (8)

ஆலமர்ந் தன்னா ளிருடிக ணால்வர்க்
கறிவியா தறிவித்த வள்ளால்
ஆலமு துண்டு மமரரைக் காத்தா
யன்பனா மார்க்கண்டர்க் காகக்
காலனைக் காய்ந்தாய் நின்பெருங் கருணை
கண்டுவந் துன்பணிக் கிசைந்த
பாலனை யாள்வாய் பரமதே வாபி
பதமலர் மனத்துவா ழியவே. (9)

மூலத்திற் காலா லூதிக்கும் பித்தே
முனைவழி யூடுசென் றிருண்ட
பாலமுங் கடந்து பேச்சுமூச் சில்லாப்
பரவெளிப் பதியமர்ந் தாங்கு
சீலமா யுருகு மமிர்தத்தை யுண்டு
தேறுவா யென்றகத் துரைத்த
பாலலோ சனனும் பரமதே வாபி
பதமலர் மனத்துவா ழியவே. (10)

என்னுளத் திருந்த காமமா திகளை
யெடுத்துவிட் டினியசாந் தாதி
மன்னிய மில்லாப் பக்திவை ராக
மன்னையு நிராதையோ டமைத்த
தென்னெனி னின்னை யென்னகத் திருத்தி
யிறைஞ்சுதற் காமென விசைக்க
நன்னில மாக்கிக் கொண்டதே வாபி
நற்பத மனத்துவா ழியவே. (11)

பாசவே ரறுத்து மும்மலச் சேற்றைப்
பரிகரித் தீனசஞ் சிதத்தை
மாசறத் துடைத்து மனமுப சாந்தி
வந்துமேற் குருபர னுவக்கத்
தாசனு மாக்கி யினிப்பிற வாத
சாதன சமாதிகை காட்டி
யீசனோ டொன்றப் புரிந்ததே வாபி
யிணையடி மனத்து வாழியவே. (12)

ஞானவை ராக்ய மார்க்கத்தி லொழுகு
ஞானிக ளிதயமாங் குகையைத்
தானமாக் கொண்டா யெனல்சதி ரன்று
சாமிநீ பூரண னுகி
லீனவெ னுளத்துங் கோவில்கொண் டமர்ந்தா
லிதுசமர்த் தாகுமெய் வருத்த
மானதொன் றில்லை யமலமே தே வாபி
யருட்கழன் மனத்துவா ழியவே. (13)

உடல்பொரு ளாவி யுன்னிடத் தீந்த
துண்மையோ பொய்யுப சார
மடமையை யுணரின் மாயவிவ் வுலக
வாழ்க்கையென் மனத்திடை யதிக
திடமுற விருப்பி னுய்வகை யாமோ
திருவுளத் திரங்கியாட் கொள்வாய்
வடநிழற் குருவாய் வந்ததே வாபி
மலர்க்கழன் மனத்துவா ழியவே. (14)

எண்ணில்பல் பிறவி யெடுத்தெடுத் திளைத்த
திதுவரை போதுமென் றுவப்பாய்ப்
புண்ணிய ரீட்டப் பதமலர் சூட்டிப்
பூரணப் பொருளையும் புகட்டிக்
கண்ணிமை காத்த தென்னவென் கண்ணிற்
கருணைசெய் தாயினி யடியேன்
நண்ணிய பொருள்கை புகுத்துதே வாபி
நற்பத மனத்துவா ழியவே. (15)

பாதக மியாவு நின்பெருங் கருணைப்
பார்வையா லகலுமென் றுரைத்த
வேதமும் பொய்யோ வினையகன் றிடற்கு
வேறுள தென்னின்மற் றந்தச்
சாதன மருளத் தகுதியா மாயின்
சார்ந்ததை யனுசரித் துய்ய
வாதனை யகல்வே னகண்டதே வாபி
மலரடி மனத்துவா ழியவே. (16)

சுவாமி M. வேதநாயகம், F. T. S.

2 65

## அஹல்யா சாப விமோசநம்.

(168-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒருவனிடத்துள்ள குறையை மாற்றுவதற்கதற் கெதிராயுள்ள நற்குணத்தை தியானித்தல் மேன்மையான மார்க்கமாகும். பகவானே அநந்த கல்யாண குணநிதி. அப்படியிருக்க அவரைத் தியானித்தல் நம்மிடமிருக்கும் சகல குற்றங் குறைகளையும் நீக்கிவிடும். மேலும் ஸ்ரீராமசந்திர மூர்த்தியோ நீ யெந்த விஷயத்தில் தவறினையோ அந்த விஷயத்தில் பரிபூரணமான திருட சித்தனாக விளங்கப் போகிறார். பகவத் ஸ்வரூபத்தை யாலிங்கனம் செய்ய விரும்பின ரிஷிகளுக்குக் கூட ஆலிங்கன மளிக்காமல் ஏகபத்னீ விரதத்தை யநுஷ்டிக்கப் போகிறார். அவரது ஸ்வரூபத்தை யுனக்குபதேசம் செய்கிறேன். அதை தியானித்து வந்தாயானால் நீயுந்த பதவியை யடைவாய். மேலுமந்த பகவானே யுன்னை யிச்சாபத்தினின்று விமோசனம் செய்வார்.

இதைக் கேள்வியுற்ற அஹல்யை யளவிலா ஆனந்தத்தை யடைந்தவளாய் கௌதமருக்குத் தன் மீதுள்ள கிருபையின் நிமித்தமவரைத் துதித்து, "நாதா, என்னையனே, நான் தவறினபோதிலுமித்தகைய பாக்யத்தைப் பெறும்படியான சாபத்தைத் தாங்கள் கொடுத்ததைப் பற்றி நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். தாங்கள் மொழிந்த வண்ணமே பகவானவதாரஞ் செய்வாரா? இங்கு வந்தென் துயர் தீர்த்தருள்வாரா?" என வினவினள். அதற்கு கௌதமரும் "அஹல்யே! என்னு லறியக் கூடிய வரையில் பகவா னவ்வித மவதரிப்பாரென்று தோன்றுகிறது. ஆனால் கட்டாய மவ்விதம் தான் நடக்குமென்று சொல்வது ஒருவருக்கும் சாத்யமான கார்யமல்ல. பகவானுடைய இச்சை யெவ்விதமிருக்கிறதென்று நிச்சயமாக பிரஹ்மதேவராலும் சொல்ல முடியாது. அநேகமாய் இப்படித்தான் நடக்குமென்று மாத்திரம் கூறலாம். ஈச்வரனுடைய திருவுள்ளத்தின் படி நடக்க நாங்கள் சித்தமா யிருக்கிறோமே யல்லாமல், அத்திருவுள்ளத்தை நிச்சயிக்கவாவது மாற்றவாவ தெங்களாலாகாது. ஆனால் இப்போது ஜகத்திலுள்ள விஷயங்களைக் குறித்தாலோசித்துப்பார்க்குங்கால் மேற்கூறியவண்ணமோரவதார மேற்பட வேண்டுமென்று தான் தோன்றுகிறது என சாந்தத்துடன் மொழிந்தனர்.

கௌதமரஹல்யைக்குச் சாபமிட்டார். அஹல்யையும் கல்லைப் போலங்கு கிடத்தலானாள்."

பூலோகத்திற்கொரு திலகம் போல் விளங்கு மயோத்திமாநகரில் ஒருநாள் தசரத மன்னனது சபை கூடியிருக்கிறது. அம்மன்னனுடைய இருதொடைகளிலு மரசிளங் குமாரர்களான ராமலக்ஷ்மணர்கள் வீற்றிருக்கிறார்கள்; சபைதனில் வஸிஷ்டர் முதலிய தபோதனர்களும் ஸுமந்திரன் முதலிய அமாத்ய சிரேஷ்டர்களுமமர்ந்திருக்கின்றார்கள். சபை கலையுமுன்னர் தசரதன் தனது குலகுருவான வஸிஷ்டமுனிவரை நோக்கி, "மஹரிஷே! இவ்வுலகின்கண் எனக்குச் சமமான பாக்யசாலிகளிருப்பார்களோ என்கிற சந்தேகமெனக்கடிக்கடி வருகிறது. இக்ஷ்வாகு வம்சத்திலுதித்து தங்களைப்போலொத்த குலகுருவையும் ஸுமந்திரரைப்போலொத்த மந்திரியையு மடைந்திருக்கும் எனக்கு நிகர் யாரிருப்பார்கள்? கொஞ்சகாலத்துக்கு முன்னாவது புத்திர பாக்கிய மில்லையென்ற ஒருகுறை யிருந்தது. அதுவும் தங்களுடைய ஆசீர்வாத மஹிமையினாலும் ரிச்யச்ருங்கருடைய கிருபையாலும் நீங்கி சகலரும் கண்டு வியக்கத்தக்க புத்திரர்களையும் பெற்றேன். மேலும் சமீபத்தில் கொஞ்சகாலமாக பகவானுக்கென்மீது விசேஷ கிருபை வந்திருக்கிறதென்றே நினைக்கிறேன். மஹா தபஸ்விகளான அநேக மஹான்களிப்போதடிக்கடி என் சபையை நாடி வருகிறார்கள். இவ்விதமவர்களிதற்கு முன் வந்ததாகத் தெரியவில்லை. அவர்களனைவரும் என்னருமைச் செல்வனான ராமனிடம் வெகுவாக அன்பு பாராட்டி அவனை அதிக ஆதரவுடன் ஆசீர்வதித்துச் செல்லுகின்றார்கள். இவ்வித பாக்யத்தை நானடைய என்ன ஸுகிருதம் செய்தேனோ நானறிகிலேன். ஈசனது திருவுள மங்ஙன மிருக்கிறது போலும். ஆனாலொரு குறைமாத்திரம் என்மனத்தைப் பாதிக்கிறது. வெகுநாளாக எனக்கொரு ஆசையுண்டு; அதைப் பூர்த்தி செய்யும் தருணமின்னும் வரவில்லை."

வஸிஷ்டர்:—என்ன ஆசை, தசரதா? சொல்லக் கூடுமானால் சொல், கேட்போம்.

(இன்னும் வரும்)

R. ஸ்ரீநிவாஸ ஐயர் M. A.

267

## சுமதி என்னும் உத்தமியின் சரித்திரம்.

(3-ம் தொகுதி 348-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

சுமதியைக் காணுமல் புலம்பிக் கொண்டிருந்த கோபிநாதன் அன்றிரவு தன் வீட்டில் தங்கியிருந்து மறுநாள் காலையில் இருக்கிற சொற்ப சாமான்களையும் சுமதி வாசிக்கும் வீணையையும் தன் வில்லையும் போர்வை வஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டு சுமதியைத்தேடும் பொருட்டுப் பிரயாணப்பட்டான். எந்த ஊருக்கு என்று போய்த்தேடுவான். இன்ன ஊருக்குப் போகிறது என்று தீர்மானம் பண்ணுமல் ஒரு பெரும் ரஸ்தாவில் வடக்கு நோக்கிப் புறப்பட்டான். சில முக்கிய பிரயாணஸ்தலங்களுக்குப் போய்ப் பார்த்தால் வழிதப்பிப் போன சுமதி எவராவது யாத்திரைக் காரருடன் போயிருக்கக் கூடுமாகையால் அவ்விடங்களில் ஒருகால் அவளைக் காண இடமுண்டு என்று நினைந்தான். அன்று பகல் முழுவதும் பிரயாணம் பண்ணி மாலைப்பொழுதில் சுமார் இருபத்தைந்து நாழிகைக்கு ஒரு தடாகம் வந்து சேர்ந்தான். களைப்பின் மிகுதியால் அதன் கரையிலுள்ள ஒரு சோலையில் தங்குவதற்கு ஒரு விசால விருக்ஷத்தைத் தேடிச்சென்று அதன் அடியிற் சிறிது படுத்திளைப்பாறிப் பின் எழுந்து அதன் தெள்ளிய நீரில் ஸ்நானஞ் செய்து தன் மாலைக் கடனை முடித்துத் தான் கையில் கொணர்ந்திருந்த ஆகாரத்தைப் புசித்து, அடுத்துச் சிறிது தூரத்தில் காணப்பட்ட ஒரு பட்டணத்தை நோக்கிச் சென்முன். போகும் வழியில் சில பிரயாணிகள் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களும் அதே பட்டணத்துக்குச் செல்வதாக அறிந்து அவர்களுடன் சென்று இரவில் அப்பட்டணத்தின் ஓரத்திலிருந்த ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தான்.

அது மிகவும் பெரியதாயிருந்தது. அந்நாடுகளில் அவைகளை தர்மசாலை யென்று வழங்குவார்கள். அதில் நான்கு வருணத்தாருக்கும் நான்கு பிரத்தியேகமான கட்டுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. கோபிநாதன் க்ஷத்திரியன் ஆகையால் தங்கள் குலத்தாருக்கு ஏற்பட்டிருந்த கட்டுக்குட்சென்று பார்க்கவே ஆங்குப் பற்பல தேசங்களிலிருந்து வந்திருந்த தன் குலத்துப் பாட்டைசாரிகள் பலர் தங்கியிருப்பதைக் கண்ணுற்ருன். கோபிநாதனுக்குச் சிறிது

மனமகிழ்ச்சி உண்டாயிற்று. ஒரு பக்கத்தில் தன் மூட்டையை இறக்கி வைத்துவிட்டு ஒருகால் சுமதி அக்கூட்டத்தில் அகப்படு வாளோ என்று அந்த விசாலமான கட்டிடம் முழுவதும் துருவி ஞன். சுமதியைக் காணமுடியவில்லை. பின் தன்னிருப்பிடம் வந்து தன் போர்வையை விரித்து மூட்டையைத் தலையணையாக வைத்துக் கொண்டு வீணையையும் வில்லையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு படுக்க ஆரம்பிக்கவே அங்கு வந்திருந்த பிரயாணிகளில் ஒருவன் இவனது வீணையைப்பார்த்துப் பிரமித்து நின்ருன். அம்மனிதனுக்கு சங்கீதத்தில் மிகவும் ஆசையுண்டு. அதனுல் சிறிது நேரம் அவன் கோபிநாதனையும் வீணையையும் உற்றுநோக்கிப் பின் அவனுடன் பேசத் தொடங்கி அவன் க்ஷேமசமாசாரங்களை விசாரித்தான். இருவருக்கும் சிறிது சிநேகம் உண்டாகவே அம்மனிதன் கோபிநாதனைச் சிறிது வீணை வாசிக்கும் வண்ணம் வேண்டினுன். கோபிநாதனே மனக்கவலையில் மூழ்கியிருந்தபடியால் வாசிக்கப் பிரியப்படவில்லை. பின்னும் அப்புது நண்பன் வற்புறுத்திக் கேட்கவே அவனது இங்கித குணத்தை நோக்கி அவன் வார்த்தையைத் தட்டப் பிரியமில்லாதவனுய் வீணையை யெடுத்து முறுக்காணிகளைச் சற்று முறுக்கித் தந்திகளைத் தடவிச் சுருதி கூட்டிச் சிறிது வாசிக்கத் தொடங்கவே அங்கு வந்திருந்த கூட்டத்தார் அனைவரும் அவனைச் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டும் நின்று கொண்டும் மிகவும் ஆவலாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

சங்கீதத்தைப்போல் எந்தப் பிராணியையும் வசீகரப்படுத்தக் கூடியது வேறு யாதொன்றுமில்லை. பச்சைக் குழந்தையும் தாயின் தாலாட்டைக் கேட்டுத் தூங்கவில்லையா? புற்றிலிருக்கிற பாம்பையும் அது படமெடுத்து ஆடும்படி செய்வதை நாம் கண்கூடாகக் காணுகிருேம். பாரமிழுத்துச்செல்லும் மாடுகளும் வண்டிக்காரர்கள் பாடும் பாட்டைக் கேட்டு ஆனந்தித்துக் களைதீருகின்றன. (சங்கீதத்தால் சிறைச்சாலையிலிருந்த ஒரு மனிதன் எலிகளுடன் நட்புக் கொண்டதாக நாம் சரித்திரங்களில் வாசித்திருக்கிருேம். யுத்தகளத்திலுள்ள குதிரைகள் அதனுல் உற்சாகப்பட்டு வீரத்துடன் தங்கள் அபாயத்தையும் எதிர் பாராமல் சத்துருவை நோக்கித் தீரத்துடன் செல்லுகின்றன. படகுக்காரர்கள் கடல் நீரில் பாடிக்

களித்துத் தங்கள் சிரமத்தை ஒருவாறு போக்கிக்கொள்ளுகிறார்கள். ஏற்றுச்சாலிறைப்பவனும் தன் பாட்டால் தன் களைப்பைத் தீர்த்துக் கொள்ளுகிறான். நாற்று நடுபவர்களும், பருத்தி பறிப்பவர்களும் பாடிக் களித்துத் தங்கள் வேலையை உற்சாகத்துடன் செய்து முடிக்கிறார்கள். அதற்கு வசப்படாத பிராணி ஜீவ சிருஷ்டிகளில் கிடையாது. அதனைக் கேட்டிடில் வியாதிக்காரர்களுக்கும் வியாதி நீங்குமென்றால் அதன் மாண்பைக் கூறவும் வேண்டுமோ! வேதகானத்தால் மழையும் வருஷிக்கின்றதே! இராவணன் தன் கஷ்டத்தைத் தீர்த்துக் கொண்டது சாமகானத்தா லன்றோ? புல்லாங்குழலின் இனிய குரலைக் கேட்டுக் கொண்டே மலைச்சரிவில் மாடுகள் மந்த கதியாய் இறங்கி வந்து வீடு நோக்கிச் செல்வதைப் பார்க்கிறோமே. பாகவதத்தில் கிருஷ்ணபகவான் யமுனாதீரத்தில் புல்லாங்குழல் வாசித்துச் சகல ஜீவராசிகளையும் ஸ்தம்பிக்கச் செய்ததையும், ஆனாயநாயனார் பெரிய புராணத்தில் பஞ்சாக்ஷரகானத்தால் அனேகமாதிரி செய்ததையும் நாம் படித்திருக்கிறோம். ஆகிரிராகம் பாடினால் கல்லு முருகுமென்றால் அதன் வல்லமையைப் பேசவும் வேண்டுமோ.

*

*

கோபிநாதன் வீணாகானத்தைக் கேட்டு எல்லோரும் பரவசமடைந்தார்கள். அவனிடம் முதலில் சென்று அவனை வாசிக்கக் கேட்ட நண்பன் உயர் குலத்துப் பிறந்த ரஜபுத்திரன். மிகவும் செல்வமுடையவன். அவன் பெயர் ஜபசிங்கு. கோபிநாதனுடைய காம்பீரிய குணத்தையும் அவன் வடிவழகையும் புத்திக் கூர்மையையும் கண்டு வியந்து அந்தரங்க அன்புடையவனாய் அவனைத் தன்னிருப்பிடம் அழைத்துக் கொண்டுபோய் தகுந்த விதம் உபசாரம் செய்து தன்னுடனே இருக்கும் வண்ணம் வேண்டினான். காலையிற் புறப்படுங்கால் கோபிநாதனையும் தன்னுடன் வண்டியில் ஏற்றிக் கொண்டு தன் மனமொத்த மித்திரன்போல் உபசரித்து வந்தான். அந்நண்பனுடனே இரண்டு மூன்று நாள் பிரயாணம் பண்ணினதில் இருவருக்கும் சிநேகம் அதிகரித்தது. போயிறங்கின இடங்களிலும் கண்ணுக்கெதிரில் காணப்படும் சத்திரங்களிலும் கோபிநாதன் சுமதியைத் தேடித்தேடிப்பார்த்தும் பயன்படவில்லை. கடைசி

யாய் எல்லோரும் நாஸிகைபோய்ச் சேர்ந்தார்கள். போகுங்கால் ஜயசிங்கு, கோபிநாதனுடைய விருத்தாந்தங்களைச் சிறிது சிறிதாகக் கேட்டு மனமுருகி அவனிடத்தில் மிகவும் அநுதாபங்கொண்டான். சுமதியின் குணகுணங்களைக் கோபிநாதன் அடிக்கடி வியந்து பேசுங்கால் அவனை அறியாது அவன் கண்களில் நீர் ஊற்றுப்போல் பெருகிக்கொண்டிருக்கும். ஜயசிங்கு அதனை யறிந்து அவனைப் பலமுறை தேற்றினதுமன்றி அந்த யாத்திரை முடிந்ததும் சுமதியைத் தேடத்தகுந்த வண்ணம் ஏற்பாடு செய்வதாகவும் வாக்களித்தான். அதனால் கோபிநாதன் சிறிது தைரியங்கொண்டு அந்நாளை சாதகபக்ஷிபோல் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

நாஸிகை ஒரு பெரிய புண்ய க்ஷேத்திரம். ஸ்ரீமத் இராமாயணத்தில் கூறியிருக்கும் பஞ்சவடி அதுதான். அதற்குச் சமீபத்தில் கோதாவரி நதி உற்பத்தியாகி மிகவும் கம்பீரமாய் ஒடிக்கொண்டிருந்ததைக் கண்ணுற்ற அப்பிரயாணிகளுக்குப் பரமானந்தம் உண்டாயிற்று. அதன் இனிய காட்சியைக் காணவே அதன் நீர்போல் அவர்கள் மனமுங் குளிர்ந்தது. இராமாயணக்குறிப்புக்களையெல்லாம் அங்கே காணவே சிந்தோஷத்துடன் பக்தியும் மேலிட்டது. ஜனங்கள் பல்லாயிரக்கணக்காக அவ்விடத்தில் வந்து கூடியிருந்தார்கள். ஸ்நாநம் பண்ணுகிறவர்களும் பூஜை பண்ணுகிறவர்களும் அதன் கரையின் கண் அமர்ந்து தவம்பண்ணுகிறவர்களுமா யிருந்தார்கள். இப்பாரதகண்டத்தின் புண்ய புருஷர்களை அவ்விடம் மிகவும் சுலபமாய்த் தரிசனம் செய்யலாம். அங்கு ஜயசிங்கும் கோபிநாதனும் மூன்றுநாள் வசித்தார்கள். அச்சமயம் அக்கூட்டத்தில் சுமதி ஒருகால் தென்பட மாட்டாளா வென்று கோபிநாதன் தேடித் திரிந்தான். அவளைக் காணவில்லை.

பிறகு ஜயசிங்கு தன் குடும்பத்தைச் சார்ந்தவர்களையும் கோபிநாதனையும் கூட்டிக்கொண்டு மதுராபுரி, கோகுலம், பிருந்தாவனம் முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசனஞ் செய்துகொண்டு ஹரித்துவாரம்போய்ச் சேர்ந்தான். இந்த நெடுநாள் பிரயாணத்தில் கோபிநாதன் பந்துவைப்போல் பழகிவிட்டான். ஜயசிங்கினது தாய்தகப்பனும் அவன் குடும்பத்தைச் சார்ந்த மற்றையோரும் இவனிடத்

தில் மிகவும் பிரீதி பாராட்டி வந்தார்கள். அவனுடைய வாய்ப்பிறப்பின் மூலமாகவும் அவனது புத்தி சாதுர்யத்தினாலும் நடையுடை பாவனையினாலும் கம்பீரகுணத்தினாலும் அவனை எல்லோரும் மிகவும் மதித்துவந்தார்கள். நாளடைவில் அவனுக்கும் அவர்களுக்குமுள்ள குலமுறையும் சிறிது தெரியவந்தது. ஜயசிங்குக்கு யமுனாபாய் என்று ஒரு சகோதரியிருந்தனள். அச்சிறுமி கோபிநாதனிடம் மிகவும் உள்ளன்புடையவளாய் இருந்தும் வெளிக்குக் காட்டாமல் மிகவும் வினயமாய் நடந்துவந்தாள். சுமதியை நிகர்த்த பிராயமுள்ளவள். கோபிநாதனுக்கும் அவளிடம் அந்தரங்க நேசமுண்டாயிற்று. கம்பீரகுணத்தால் அதனைச் சிறிதும் வெளிப்படுத்தாமல் நடந்துவந்தான். ஜயசிங்கைப்போலவே யமுனாபாய்க்கும் சங்கீதத்தில் மிகவும் பிரியமுண்டு. அவர்கள் தாய்தகப்பனார் வழிப்பிரயாணங்களில் பொழுதுபோகாத பொழுது யமுனாபாயைப் பாடச்சொல்லி ஜயசிங்கையாவது கோபிநாதனையாவது வீணைவாசிக்கச் செய்து கேட்டு ஆநந்திப்பார்கள். கோபிநாதன் வாசிக்குங்கால் யமுனாபாய் மாங்குயில்போல் தீங்குரலுடன் உற்சாகமாகப் பாடுவாள். அவர்களது பரஸ்பரமான உள்ளன்பு அவர்களிருவருக்குமே தெரியாது.

ஒருநாள் யமுனாபாயின் தாயாகிய இலக்ஷ்மிபாய் தன் நாதனிடம் தனித்துக் குடும்ப விஷயங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கையில் தன்புத்திரியின் கல்யாணவிஷயத்தைப் பற்றிப் பேசினாள். அச்சமயம் அவள் பர்த்தாவான கிருஷ்ணசிங்கு தன் மனத்தை ஒருவாறு வெளியிட்டான். “என் அன்பே! யமுனாபாயின் குணத்துக்கும் அழகுக்கும் அறிவுக்கும் தக்க மணவாளன் நம் நெருங்கிய சுற்றத்தாருள் ஒருவரையும் காணேம். கோபிநாதனே எல்லாவிதத்திலும் பொருத்தமுடையவனாயிருக்கிறான். அவன் கம்பீர குணத்தையும் வினயசம்பத்தையும் புத்திசாதுர்யத்தையும் நோக்குங்கால் அவனே நம் யமுனைக்குத் தக்க மணவாளனாவான். தற்காலம் அவன் நிலைமை நம் நிலைமைக்குத் தாழ்ந்திருப்பினும் உயர்குடியிற் பிறந்தவனாகையால் அவனை தக்கவனெனக் காண்கிறது. மானம், குலம், கல்வி, வண்மை, தாளாண்மை, அழகு முதலிய அரிய குணங்கள் பொருந்தியவனாக இருக்கிறான்.

பல அறிகுறிகளால் உயர்ந்த ஸ்திதிக்கும் வரலாமெனத் தோற்றுகிறது. யமுனையும் அவனிடம் உள்ளன்பு பாராட்டுகிறவளாகச் சில குறிப்புக்களால் ஊகித்தேன். பொருட்செல்வத்தை முன்னிட்டு மட்டும் விவாகம் நடத்துவது நலமாகாது. செல்வம் சகடக்கால் போலச் சுற்றிவரும். இதுவிஷயத்தில் உலகத்தார் கண்மூடித்தனமாக இருக்கிறார்கள். பெண்ணின் சௌக்யத்தைத் தேடுகிறவர்கள் இவ்வொரு விஷயத்தில் மட்டும் மயங்கலாகாது. "பணம் பந்தியில் குலம் குப்பையில்" என்று எண்ணிவருகிறார்கள். விவாகம் நெடுநாள் பயிராகையாலும் தெய்வசங்கற்பமான ஓர் உயர்நலமாகையாலும் பெற்றோர்கள் நீள நினைந்து பெண்ணின் நெடுநாள் க்ஷேமத்தையே கருதி ஏற்பாடு செய்யவேண்டும். தற்கால நிலைமையை மட்டும் சீர்தூக்கிப் பார்ப்பதில் பயனில்லை. முன்பின் பார்த்தே இவ்விஷயத்தில் தீர்மானம் செய்யவேண்டும். அவ்வாறு செய்யாத் குறைவால் பலர் துன்பத்திற்குள்ளாகிறார்கள். எல்லாப்படிப்பினும் நான் சீர்தூக்கிப்பார்த்தமட்டில் கோபிநாதனே தக்கவனாகத் தோற்றுகிறது. அவனுக்குள்ள ஒரே குறைவையும் ஒருவாறு நிவிர்த்தி செய்ய நம்மால் இயலாததில்லை. பெற்றோர்களுக்குத் தம் மக்கள் எல்லாரும் சரியே. பூர்வகாலத்தில் அக்கால நிலைமையை உத்தேசித்து சாஸ்திரம் ஒருவாறு ஏற்பட்டுவிட்டது. அதனையே இக்காலத்தில் அநுஷ்டிக்கவேண்டுமென்பது சரியாகாது. காலத்துக்குத் தக்கவண்ணமே ஜனசமூகத்தார் அவைகளைச் சீர்திருத்துதல் நியாயம். ஆனால் இதுவிஷயத்தில் நம் நாட்டார் நம் வர்ணாச்சிரம தர்மத்துக்கும் தேசக்ஷேமத்துக்கும் விரோதமாய் அந்நியர்களுடைய முறைகளை அநுசரித்து அவசரப்பட்டுச் சீர்திருத்தஞ்செய்யலாகாது. அவ்வாறு செய்யின் அவை போலித்திருத்தங்களாகுமே ஒழிய உண்மையான சீர்திருத்தங்களாகா. செய்கிற திருத்தங்கள் மனம்போனபோக்கா யில்லாமல் கூடியமட்டும் சாஸ்திரவிரோதமில்லாமலும் நம் தேசவழக்கத்துக்கும், ஜனசமூகத்துக்கும் ஒத்தும் இருக்கவேண்டும். முன்னிருந்த நிலைமையிலேயே இருக்கிறதும் தேசக்ஷேமத்துக்கும் ஜனசமூகத்துக்கும் குறைவே. ஆகையால் அப்போதைக்கப்போது புத்திமான்கள் ஒன்றுகூடி நீள நினைந்து ஜனசமூகத்தின் கருத்தின்படி சீர்திருத்தங்கள் செய்வதே நலமாகும்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' வழுவலகால வகையி ஞனே'' என்று பெரியோர் கூறியதைக் கொண்டு ஒழுகவேண்டும். தற்காலம் நம் நாட்டில் மணவிஷயமாய் நடந்துவருகிற விஷயங் கள் கேடுபயக்கத் தக்கனவாயிருக்கின்றன. ஆடுமாடுகளை விலைக்கு விற்பதுபோல் மணமகனுக்கு விலையேற்படுத்திக் கொடுமைகள் செய்துவருகிறார்கள். கல்யாணங்கள் முற்காலம்போல் பந்துப் பிரி யத்துக்கும் உள்ளன்புக்கும் நிகழ்வதில்லை. பணத்துக்கே முக்கிய மாய் ஏற்பட்டு வருகின்றன. அதனால் தேசத்துக்கு உண்டாகும் க்ஷேமக்குறைவு பல. இதனால் பலர் கேட்டையடைவதுமன்றி மனஸ் தாபத்துக்கும் உள்ளாகிறார்கள். தங்கள் நிலைமைக்கு மீறிச் செலவு செய்ய நேரிடுவதே இக்கேட்டுக்குக் காரணம்.

இது நிற்க. பிதாவானவன் தன் மக்களை யெல்லாம் ஒரே தன்மையாய்ப் பாவிக்க வேண்டும். தன் ஆஸ்தியை ஆண்மக்களு க்கே பங்கிட்டுக் கொடுத்துப் பெண்மக்களை அசட்டை செய்கிறான். பெண்மக்களும் தன்வயிற்றிற் பிறந்திருக்க ஏன் இவ்வித வித்தியா சம் பாராட்டல் வேண்டும்? ஆண்மக்கள் கர்மத்துக்கதிகாரிகளா கிற தன்மையால் நம்முன்னோர்கள் விபாக விஷயத்தில் ஒருமுறை ஏற்படுத்தி விட்டனர். அவ்வாறு செய்தாலும் பெண்மக்களுக்கு ஸ்ரீதனம் ஏற்படுத்தி அவர்களுடைய அபிவிருத்தியைத் தேடிவந் தார்கள். காலக்கிரமத்தில் அக்கம்பீரமான நோக்கம் மலினம் அடையவே ஆண்மக்களுடைய நிலைமை மேலிட்டுப் பெண்களின் கதி அதோகதியாய்விட்டது. பெற்றோர்களுடைய ஆஸ்தியில் ஒரு சிறிது பாகமாவது பெண் மக்கள் அடைய வேண்டியது நியா யமே. ஒரு தனவானுக்கு ஒரே ஆண்மகனும், பல பெண் மக்களு மிருந்து அத்தனவான் கோடீசுவரனாகவும் இருந்து அச்செல்வ மும் பிதிரார்ஜிதமான ஸ்தாவர சொத்தாயிருந்தால் சகல பாத்தி யங்களும், ஆண் மகனுக்கே போய் விடுகின்றன. பெற்றோர்கள் தங்கள் ஜீவகாலத்திலேயே தக்க ஏற்பாடுகள் செய்து பெண்மக்களு க்கு ஏதாவது ஒரு வழி ஏற்பாடு செய்யாமல் விட்டுப்போனால் பெண் மக்களின் கதி அதோகதியாய் விடுகின்றது. புத்திரன் அவ்

வாஸ்தியை மனம்போன போக்கில் செலவிட்டு அழிக்கவும், அதே காலத்தில் அவன் சகோதரிகள் அவன் கண்ணெதிரிலேயே வறுமை யான நிலைமையிலிருந்து கண்ணுங் கண்ணீருமாய் நின்று காலங் கழிப்பதையும் நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். பெற்றோர்க்குள்ள வாஞ்சை சகோதரனிடத்தில் எதிர்பார்க்கலாமா? கோடியில் ஒருவன் தந்தையின் ஸ்தானத்தை வகித்துத் தன் சகோதரிகளைத் தன் மக்கள் போலவே நினைத்து வேண்டிய சௌகரியங்களைச் செய்வான். அவ்வாறு செய்யும் காலும் அவன் சகோதர வாஞ்சையால் செய்கிறானேயொழிய பெண்களின் பாத்தியதையால் செய்கிறதில்லை. தன் எண்ணத்துக்கும் உயர்நடைக்கும் குலநலத்துக்கும் முற்றிலும் விரோதமான விஷயங்களை ஒரு சகோதரன் செய்தாலும் அவருக்குச் சரிபாகம் மனமில்லாமலே சட்ட பாத்தியதையால் கொடுத்துதவுவான். சகோதரிகள் எத்துணை இன்பு பாராட்டி குலப்பெருமைக்குத் தக்க வண்ணம் நடப்பினும் இவனுக்கு மனமிருந்தாலொழிய யாதொன்றும் பாத்தியதையாகக் கொடான், இது நியாயமாகத் தோற்றவில்லை. ஆகையால் நான் நம் யமுனைவிஷயத்தில் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை இப்பொழுதே செய்து அவளை கோபிநாதனுக்கு மணம்புரிய எண்ணி இருக்கிறேன். இவ்விஷயத்தில் நீயும் யமுனையின் கருத்தை யறிந்துகொள். அவளுக்கும் ஜயசிங்குக்கும் நான் சிறிதும் வேற்றுமை பாரேன். ஜயசிங்கும் சற்புத்திரன். யமுனையினிடத்தில் மிகவும் அன்புடையவன். அவன் மனத்துக்கும் இதுவிஷயம் களிப்பை உண்டாக்கும் என்றே நினைக்கிறேன். நானே அதனைச் சாடையாகக் கேட்டறிவேன். நீயும் பின்னர் அவன் மனோபீஷ்டத்தைக் கேட்டறியலாம். முதலில் யமுனையின் கருத்தையறி "என்று சொல்லிவிட்டுத் தன் மகன் ஜயசிங்கைக் கூட்டிக்கொண்டு ஊருக்குவெளியே உலாவிவரப் புறப்பட்டான். கோபிநாதன் அச்சமயம் வேறொரு காரியமாக வெளியே போயிருந்தான்.

(இன்னும் வரும்.)

ஏஸ். சாமிநாதையர்.

# மநம்.

'மநம்' இன்னதென்பதும், அதன் வியாபாரங்களும், அவற்றால் விளைவனவும், மனத்தையடக்கி யின்புறும் வழிகளும், பிறவும் இவ்வியாஸத்திற் கூறப்படும்.

செவி (சுரோத்திரம்) முதலிய இந்திரியங்களின் வழியாகச் சென்று சத்தம் முதலிய விடயங்களைப் பற்றுவதே மனம் எனப்படும். இந்த மனத்தினுடைய கூட்டரவு (சையோகம்) இல்லாமல் இந்திரியங்கள் சேட்டிக்கமாட்டா. நாம் யாதேனு மொன்றைச் சிந்தித்துக்கொண்டு செல்லும்பொழுது எதிர்ப்பட்ட பொருள்களைக் கண் பாராதிருத்தலும், யாதேனு மொன்றைப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது பிறர் கூறுவனவற்றைச் செவி கேளாதிருத்தலும், பிறவு மிவ்வாறே நிகழ்தலும் அறிகின்றோமல்லவா? அன்றியும் மனமென்ப தொன்றில்லையாயின் ஒருகாற்கண்டு கேட்டுணர்ந்த தொருவிடயத்தைப் பிறிதொருகால் நினைத்தலும், சொப்பனத்தில் பலவற்றை விடயித்தலும் கூடாவாம். அவ்வாறு விஷய வுணர்ச்சிக்கு இன்றியமையாததாயிருக்கிற மனமும், அதனுடன் சேர்த்தெண்ணப்படும் புத்தி, சித்தம், அகங்காரம் என்பவைகளும் தாமே கருத்தாவாதலின்றி, புறத்தே கருவியாயிருக்கிற செவிமுதலியவைபோல அகத்தே ஆன்ம சிற்சத்திக்குக் கருவியாய் நிற்றலின், 'அந்தக்கரணம்' என்னும் பெயராற் சொல்லப்படுகின்றன. இவற்றுள் சித்தத்தை மற்றொன்றிலடக்கி மூன்றெனக்கொள்ளுதல் சில ஆசிரியர் கருத்து. மூலப்பிரகிருதியினின்று சித்தமும், சித்தத்தினின்று புத்தியும், புத்தியினின்று அகங்காரமும், அகங்காரத்தின் ஓர் பகுதியாகிய தைசத வகங்காரத்தினின்று மனமும் தோன்றினவென்றும், மனம் ஒன்றைப் பற்றுத (சங்கற்பித்த) லும், சித்தம் அது யாதென்று சிந்தித்தாராய்தலும், புத்தி அஃதின்னதென நிச்சயித்துத் தானே சுகதுக்க மோகவடிவமாய்ப் பரிணமித்து உயிரின் அறிவு தொழில்கட்கு விடயமாதலும், அகங்காரம் என்னொடொப்பாரில்லையென அகந்தைப்படுதற்குக் காரணமாய் யாதாமொரு விடயத்தை யானென்றும் எனதென்றும் அபிமானித்து உயிரோடும் வேற்றுமையின்றி நிற்றலு முடையனவென்றும், அவைகள் அயன் முதலிய தெய்வங்களா லதிஷ்டிக்கப்படுகின்ற அகாரம் முதலிய அக்ஷரங்களால் தொழிற்படுகின்றனவென்றும், அரசற்கு அமைச்சர்போல

அவை ஆன்மாவிற்கு இன்றியமையாதனவென்றும், சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன. மனம் ஒன்றுதானே சங்கற்பித்தலும், சிந்தித்தலும், நிச்சயித்தலும், அகங்கரித்தலும் ஆகிய அவஸ்தாவிசேஷத்தால் வெவ்வேறு பெயர்களைப் பெறுகின்றன வென்பதும் அமையும். இனி, தார்க்கிகர் மனமாவது சுகம் முதலிய அநுபவத்திற்குக் கருவியாகிய இந்திரியமென்றும், அது உயிர்தோறும் நியதமாயிருத்தலின் அநேகமாய் பரமாணு ரூபமாய் நித்தியமா யிருக்குமென்றும், சுழுமுனை நாடியின் வேறான விடத்து ஆன்மாவிற்கும் மனதிற்கு முளதாகிய சையோகம் எக்காலமுமுண்டென்றும், மனம் சுழுமுனை நாடியின் ஒடுங்கிய காலத்துத் துயில்கூடும், ஒடுங்காதகாலத்தே அறிவு நிகழுமென்றும் கூறுவர். ஆன்மா, இருதயஸ்தானத்தில் சித்தம், பிராணவாயு ஆகிய இரண்டு கருவிகளுடன் கூடியிருக்கும் அவசரமே சுஷுப்தி யவஸ்தையென்றும், அப்பொழுது மனமானது சொப்பன ஸ்தானமாகிய கண்டத்திலேயே நின்றுவிடுமென்றும் வேதாந்த சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. மற்றும் பற்பல சாஸ்திரங்கள் பற்பலவிதமாய்ப் பகர்கின்றன.

இனி, இங்ஙனம் சாக்கிர சொப்பனங்களில் விடய சங்கற்பாதி செய்கின்ற மனமானது ஒருகணப்பொழுதில் பூமி, அந்தரம், பாதலமாகிய புவனமுழுதுஞ் சுற்றித் திரிந்து ஓரிடத்தும் ஸ்திரமாய் நில்லாமல் ஒன்றிலும் திருப்தியடையாமல் பெற்றதைச் சிறிதாக்கிப் பெறாததைப் பெரிதாக்கி அளவிறந்தகாலம் அநுபவிக்கும்படியான எண்ணிறந்த வினைகளை யுண்டுபண்ணுகின்றது. ஆ! இம்மனமானது உறவைப் பகையாக்கும், பகையை உறவாக்கும், அணுவை மலையாக்கும், மலையையணுவாக்கும், கணத்தை யுகமாக்கும், யுகத்தைக்கணமாக்கும், பொய்யை மெய்யாக்கும், மெய்யைப் பொய்யாக்கும், மேலைக் கீழாக்கும், கீழை மேலாக்கும், மற்றும் எத்தனை யெத்தனையோ செய்யும்; அவையெல்லாம் எழுதமுடியுமோ? ஏட்டிலடங்குமோ? இதன் கொடுமைதானென்னே! இதன் வன்மைதானென்னே!! கொள்ளிவட்டம் கறங்குபோற்சுழன்று குரங்குபோற் காடுங்கரையும் கால்விட்டோடும் இதனை யடக்க முடியாது. இதன் பின் சென்று எண்ணிறந்த பாவங்களைச்செய்து நெடுங்காலம் நரகத்துன்பத்தையநுபவித்தவர்களுக்குக்கணக்கிருக்குமோ? திருவருட்பெருஞ்

செல்வராகிய தாயுமானஸ்வாமிகளும் "மதயானை, கரடி, புலி, சிங்கம், பாம்பு முதலிய துஷ்டஜெந்துக்களையும் வசப்படுத்தி இஷ்டம் போல்நடத்தலாம்; இரசவாதஞ் செய்யலாம்; பிறரறியாமல் உலகத்தி லுலாவலாம்; தேவர்களை யேவலாகக் கொள்ளலாம்; எப்பொழுது மிளமைபோ டிருக்கலாம்; பரகாயப் பிரவேசஞ் செய்யலாம்; நீரின்மேல் நடக்கலாம்; நெருப்பின்மே லிருக்கலாம்; மற்றும் எண்ணிறந்த சித்திகளையும் பெறலாம்; இவையெல்லாம் அரியவல்ல; மனதையடக்கிச் சும்மா விருப்பதே மிக அருமையானது" என்று கூறுவார்களாயின் அதன் ஆற்றலை யென்னென்று சொல்லுவேம்.

நாம் எல்லோரும் மனம் வாக்கு காயம் என்கிற திரிகரணங்களினாலுமே இருவினைகளை யீட்டிக்கொள்ளுகிறோம். அவற்றுள் மனத்தினால் ஈட்டிக்கொள்ளப்படுவனவே மிக அதிகம். சொல்லும் செயலும் தோன்றியவாறெல்லாஞ் செல்லாமற் பொருட்டுப் புறத்தே அநேகந் தடைகளிருக்கின்றன; மனத்திற்கு அப் புறத் தடைகளில்லாமையால் கணப்பொழுதில் அநந்த எண்ணங்களை யெண்ணுகிறது. அன்றியும் வாக்காலும் காயத்தாலு முளவாகும் குற்றங்கட்கு வித்தாயிருப்பதும் மனமே. நம்முடைய சொல்லும் செயலும் தோன்றினவுடனேயோ கால நீட்டித்தோ இம்மையிலோ மறுமையிலோ பயன்விளைத்தல் நிச்சயமாதல்போலவே நம்முடைய எண்ணங்களும் இம்மையிலாவது மறுமையிலாவது இன்ப துன்பப் பயன்களை விளைவியாமற் போகமாட்டா. சொற்களும் செயல்களும் புறத்துள்ள மாந்தர்களா லறியப்படுகின்றமையின் அவற்றிற்குத் தக்க பலன் அரசர் முதலானோரால் அளிக்கப்படுகின்றன. அரசனது ஆணையும் கடவுளினாணை வழிப்பட்டதே. எண்ணங்கள் புறத்தாரா லறியப்படாமையின் ஒவ்வோருயிரிடத்தும் அந்தரியாமியாய் விளங்கும் இறைவனே அவற்றின் பலனை யளித்தருள்வன். இது சகல சாஸ்திரங்களுக்கும் ஆன்றோரனைவர்க்கும் ஒப்ப முடிந்ததோருண்மை. இக்கருத்தையெல்லாம் அடக்கியே சிவப்பிரகாச சுவாமிகள் "நல்லசெய்து நரரை யுயர்த்தவும், அல்லசெய்தங்களற்றிடையாழ்த்தவும், வல்லதிந்த மனமலதையனே, இல்லையென்ன வியம்புமறையெலாம்" என்றியம்புவாராயினர்.

ஆகலான் துக்க நிவிர்த்தியை விரும்பியுள்ள மானுடராயினோ ரனைவரும் "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்னும் நீதிவாக்கியத்தைக் கடைப்பிடித்து அதனை யடக்கியாளும் கடப்பாடுடையராவர். விவேகிக்கும் அவிவேகிக்கும் உள்ளபேதம் என்னவென்றால் விவேகியானவன் தத்துவக் கூட்டங்களை அடிமை யாக்கிக் கொள்வன்; அவிவேகியானவன் தத்துவக் கூட்டங்களுக்கு அடிமைப்படுவன். இவ்வுண்மை ஒருநாள் திருவிடைமருதூர்த் திரு வீதியின்கண் புழுதியிற்படுத்திருந்த பட்டினத்தடிகள் தம்முடைய சுகத்தைக்குறித்து "சிவபிரான் பவனிவரும்படியான இத்திருவீதி யானது நமக்கரசிருக்கை யாகின்றது; முப்பத்தாறு தத்துவங்களும் படையாளராகவும் ஏவலாளராகவு மிருக்கின்றன; இவ்வூர் முழுதும் மடைப்பள்ளியா யிருக்கின்றன; இதுவன்றோ சுகம்." என்னுங் கருத்தமைத்துப் பாடியவாற்றா லறியலாகும்.

மனவடக்கமானது பகிர்முகவடக்கம், அந்தர்முகவடக்கம் என இருவகைப்படும். பகிர்முகவடக்கமாவது புறத்தே சென்று விஷ யாநுபவஞ் செய்யும்பொழுதே "சென்ற விடத்தாற் செலவிடாதீ தொரீஇ—நன்றின்பா லுய்ப்பதறிவு" என்னும் பிரமாணப்படி ஆன் றோரால் வரையறுக்கப்பட்ட எல்லை கடவாது செல்ல விடுத்து போகங்களைப் புசித்து மீளுதலாம். அந்தர்முக வடக்கமாவது இந் திரியங்களின் வழியாகச் சென்று புறத்தே யுள்ள விஷயங்களைப் பற்றுதலும் அழுந்தியநுபவித்தலும் செய்யாமல் அடக்கி உண்முகப் படுத்தலாம். அவ்வாறு உண்முகப்படும்பொழுது யோகசாஸ்திரத்திற் கூறியவாறு கீழுள்ள யோகாங்கங்களை முறையே தாண்டிச்சென்று ஆறாதாரத்தின் கண்ணும் அவற்றுக்குரிய தெய்வங்களை முறையே நிறுத்தித் தியானித்துப் பின் நிருவிகற்பசமாதி கூடியவிடத்து ஆன்மாவானது இறைவனோ டிரண்டறக்கலந்து சிவாநந்தத்தை யநுபவித்துக் கொண்டிருக்கும்.

(இன்னும் வரும்.)

மு. வேங்கடசாமி நாட்டார்.

## சமாசாரம்.

ஐகோர்ட்டு அப்பீல்:—சென்னை ஐக்கோர்ட்டில் அசல் பக்கத்தில் Mr G. நாராயணஐயா மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரிடம் வித்யாப்பியாசத்திற்காக ஒப்புவித்திருந்த தன்னுடைய இரண்டு குமாரர்களையும் தன்னிடம் திருப்பி ஒப்புவிக்க வேண்டியதென்று வியாச்சியம் செய்திருந்ததில் அவர் பிராதில் சொல்லிய சில அவதூறான காரணங்கள் பொய்யென்றும் ஆனால் அவர் குமாரர்களை அவரிடம் ஒப்புவிக்க வேண்டுமென்றும், இன்னும் மற்றவிதமாய் ஜட்ஜ் Bakewell என்பவர் தீர்மானம் கொடுத்திருந்தனர். அந்த தீர்மானத்தின் பேரில் மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையார் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்தனர். அந்த அப்பீலை பிரதான ஜட்ஜாகிய Sir Arnold White என்பவரும் ஜட்ஜ் Old field என்பவரும் விசாரணை செய்து வாதியின் இரண்டு குமாரர்களும் இங்கிலாந்திலிருந்த போதிலும் இவ்வியாஜ்ஜியத்தை பரிசீலனை செய்ய சென்னை ஐக்கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டென்றும் வாதி பிராதில் சொல்லிய அவதூறுகள் வாதியால் ருசுப்படுத்தப்படவில்லையென்றும் ஆனால் அன்னிபெஸண்டு அம்மையார் வாதியின் 2. குமாரர்களை நாளது ௵ அக்டோபர்௴ 29௳ முதல் 6 வாரத்திற்குள் வாதியிடம் ஒப்புவிக்க வேண்டுமென்றும் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள்.

Mr G. நாராயணஐயாவின் குமாரர்களோ தங்களுக்கு Mr. G. நாராயணஐயாவிடம் போக இஷ்டமில்லையென்றும் அவர்களுக்கு Mr G. நாராயணஐயா சத்துருவைப்போல நடந்து கொண்டிருக்கிறாரென்றும் நிருபம் எழுதியிருப்பதாகத் தெரியவருகிறது.

அன்னிபெஸண்ட் அம்மையாருக்கு தற்காலம் மனச் சமாதானத்தைக் கொடுக்கத்தக்க காலமல்ல. இக்காலம் மனச் சமாதானத்தைக் கொடுக்கத்தக்கதாயில்லாதிருத்தல் ஆச்சரியமன்று. ஆனால் பரமசிவனுடைய அம்சத்தைப் பெற்று இப்பூமண்டலத்திற்கு இறைவனாய் என்றும் பதினாறு வயதுடைய வாலிபராய் நம்முடைய புராணாதிகளில் ஸநத்குமாரர் என்று பெயர் வழங்கிய மஹா புருஷருடைய கடாக்ஷத்தையடைந்த நம்முடைய அக்கிராசனாதிபதியாகிய அன்னிபெஸண்டு அம்மையாருக்கு எல்லாத் துயரமும் முடிவில் க்ஷேமத்திற்கே காரணமாகும் என்பதில் நமக்குச் சிறிதேனும் ஐயமில்லை. உலகத்தில் விளங்குகின்ற எவ்வுன்னதமான அதிகாரிகளும் அம்மகாபுருஷருடைய சக்தியின் பிரதிபிம்பத்தின் சாயையில் நிற்கின்றவர்களன்றோ!

அவ்விறைவன் இவ்வதிகாரிகளின் செய்கைகள் எவ்வாறுயிருப்பினும் அச்செய்கையைத் தன் கருத்துக்கிசைய பயன் பயக்கும்படி செய்ய வல்லவரன்றோ!

தவிரவும் இத்தருணம் பரமாசாரியர் இப்புவியில் மானிடர்கள் உஜ்ஜீவிக்கும்படி தோன்றும் தருணமன்றோ! அவர் தோன்று முன்னர் இடையூறுகளும் தோன்றி மறைகிறதும் வழக்கமன்றோ! முன் இவ்வாரியாவர்த்தத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானுக அவதரிக்குங்கால் அவர் அவதரிக்காதவாறு இடையூறுகள் எற்படினும் அவர் அவதரித்தாரல்லவா. இத்தருணத்தைக் குறித்து 1825 ஞுத்தில் பிறந்து 1874 ஞுத்தில் சமாதியடைந்த திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளையவர்கள் அடியிற்கண்ட பாசுரங்களால் முறையிட்டிருக்கின்றனர்.

சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே யபிமானத்து அலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிறுத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர் அவர்தாமே
வீதியிலே அருள்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றே னுமையே.

காடுவெட்டி நிலந்திருத்திக் காட்டெருவும் போட்டு
கரும்பைவிட்டுக் கடுவிரைத்துக் களிக்கின்ற உலகீர்
கூடுவிட்டுப் போயினபின் எதுபுரிவீர் எங்கே
குடியிருப்பீர் ஐயோநீர் குறித்தறியீர் இங்கே
பாடுபட்டீர் பயனறியீர் பாழ்க்கிறைத்துக் கழித்தீர்
பட்டதெலாம் போதும்இது பரமர்வரும் தருணம்
ஈடுகட்டி வருவீரேல் இன்பமிகப் பெறுவீர்
எண்மையுரைத் தேனலன்நான் உண்மையுரைத் தேனே.

காரணமிகக் களிப்புறவே கடலுலகும் வானுங்
கதிபதியென்று ஆளுகின்றீர் அதிபதியீர் நீவிர்
மரணபயந் தவிராதே வாழ்வதில்என் பயனே
மயங்காதீர் உயங்காதீர் வந்திமெனி னீண்டே

திரணமுமோ ரைந்தொழிலைச் செய்யவொளி வழங்கும்
சித்திபுர மென்வோங்கு முத்தர்சிற் சபையில்
சரணமெனக் களித்தெனையுந் தானுக்க வெனது
தனித்தந்தை வருகின்ற தருணமிது தானே.

விரைந்துவிரைந் தடைந்திடுமின் மேதினியீர் ஈங்கே
மெய்மையுரைக் கின்றேனீர் வேறுநினை யாதீர்
திரைந்துதிரைந் தளுத்தவரும் இளமையடைந் திடவும்
செத்தவர்கள் எழுந்திடவும் சித்தாடல் புரிய
வரைந்துவரைந் தெல்லாம்செய் வல்லசித்தன் தானே
வருகின்றதருணம்இது வரம்பெறலாம் நீவிர்
கரைந்துகரைந் துளமுருகிக் கண்களில்நீர் பெருகிக்
கருணைநடக் கடவுளையுட் கருதுமினோ களித்தே.

---

இம் மாசம் 2-ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காசிதத்துவ ஸபை யோர்கள் கூடி, சென்னை ஹைக்கோட்டில் அப்பீல் பிரதிகூலமானதைக் கேள்வியுற்று மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரவர்களுக்கு அடியில் வருமாறு தந்தி யனுப்பினார்கள்:—

"நம்முடைய தலைவருக்குப் (President) பூர்ண பக்தியைச் செலுத்துகிறோம். ஸ்ரீமான் லெட்பீடரவர்களுடைய சுத்த சர்யையாலும், வியக்கத்தக்க நுண்ணறிவுடன் எழுதப்பட்டிருக்கும் அவருடைய அநேக கிரந்தங்களாலும் வெகு அங்கத்தினர்கள் அடைந்துவரும் நன்மைக்கும் நன்றிசெலுத்துகிறோம்."

---

தற்காலத்தில் பற்பல ஜனஸமூஹங்கள் (Nations) ஒன்றோடொன்று ஸ்நேஹபாவம் பாராட்டித் தத்தம் அபிப்பிராயங்களை மஹா ஸபைகள் கூடி வெளியிட்டு, அறிவை விருத்தி பண்ணிக் கொள்ளல் நலமென்று மேனாட்டு ஜனங்கள் கருத்துடையரா யிருக்கின்றனர். சுமார் 1901ஆ முதல் இவ்வபிப்பிராயம் மேனாட்டாருக்குள் விசேஷமாய்ப் பரவி வருகிறது. இராஜாங்க விஷயங்களுக்கும், வியாபார விஷயங்களுக்கும் சீர் திருத்தத்தின் பொருட்டு ஆலோசனைச் சங்கங்கள் அவசியமாயிருத்தல் போலவே இன்னும்

எத்துணையோ தொழின் முறைகள் சம்பந்தமான விஷயங்களுக்கும் ஆலோசனைச் சங்கங்கள் ஏற்பட வேண்டுவது அத்தியாவசியகம். இச்சங்கங்களின் மூலமாய் ஜனங்களுக்குள் ஒற்றுமையும் ஸஹோதர பாவமும் தழைக்கின்றன. மதத்தத்துவ விசார ஸபை (Religious Congress) உலகத்தில் சண்டை நீங்கி ஸமாதானமே நிகழும் வண்ணம் உழைத்து வரும் ஸபை (World Peace Movement) இவ்விரண்டையும் அநுசரித்து, வைத்திய விஷயங்களை வியவஹரிக்கும் பொருட்டும் ஏற்பட்டுள்ள ஒரு சபையின் 17-வது மஹாஸங்கம் லண்டன் நகரில் கூடியது. அதில் 28 தேசங்களினின்று வைத்திய சாஸ்திர நிபுணர் 7000 பேர்கள் கூடியிருந்தனர். அவ்வைத்திய சிரேஷ்டர்களின் கருத்தென்ன வெனின், ஒருவருக்கொருவர் தம் அபிப்பிராயங்களையும் அநுபவங்களையும் வெளியிட்டு, குணமுள்ளவற்றை அநுஷ்டானத்திற் கொண்டால், பிணியால் வருந்தும் மநுஷ்ய கோடிகளுக்கு இன்னும் அதிக தீவ்ரமாக நலம் புரிக் கூடுமென்பதே. லார்டுமோர்லீ என்பவர் அச்சமயம் இத்தகைய மஹா ஸங்கங்களின் பெருமையையும், பொதுப் பிரயோஜநத்தையும் விரித்துக் கூறினர். இம்மஹா ஸபைகள், உலகத்தில் வேற்றுமை பாவத்தால் விளையும் இடையூறுகளைத் தொலைத்து, ஐகமத்யத்தைப் பிரபலமாக்குகின்றன வென்றும் கூறினர். அம்மஹா ஸபையின் அக்ராஸநாதிபதியும் அவருடைய முடிவுரையில்:—

"ஜாதி, மதம், பாஷை இவைகளில் வேற்றுமையைக் கவனியாது, வைத்திய முறையில் பிறவைத்தியர்களின் அநுபவங்களைக் கேட்டு, தம் சாஸ்திர அறிவை விருத்தி செய்து கொள்வதால் இன்னும் அதிக மேம்பாட்டுடன் "பிறர் பிணிதீர்த்தல்" கூடு மென்ற ஒரே பொது நோக்கத்தை முன்னிட்டு இங்கு கூடியிருக்கும் நண்பர்கள் தம் தேசத்திலும் சண்டையை விலக்கி சிநேக பாவத்தையே கைக்கொள்ளுவார்கள்" என்று வற்புறுத்தினர். இத்தகைய ஐக்ய பாவமும், பற்பல துறைகளில் மஹாஸங்கங்களின் அவசியமும் இப்போது தான் நம்மவர்கள் சிந்தையிலுதிக்கின்றன.

பத்திராதிபர்.